கருத்துச் சுதந்திரமும், வழிபாட்டுச் சுதந்திரமும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நாட்டில், யாரும் எதையும் கூற உரிமையுண்டு.

அவர் கடுமையாகத் தாக்கப்பட்டது மல்லாமல், அவர் வழிபடும் விக்கிரகங்களும், பூஜை சாமான்களும் சேதப்படுத்தப் பட்டிருக்கின்றன!

ஊரைக் கூட்டித் தெரு வழியே பகிரங்கமாக ஊர்வலம் வந்து ஒரு மதிப்புக்குரிய பெரியவரைத் தாக்கியதை, அந்த ஊர்ப் போலீஸும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறது என்பது மட்டுமல்ல—

''இன்னொரு ஊர்வலம் வருகிறது. அதற்குள் ஊரைவிட்டே ஓடி விடுங்கள்!''

என்று முன்னதாக ஓடி வந்து பயமுறுத்தி, அவரைக் காருக்குள் தள்ளி அந்த ஊரை விட்டே துரத்தியடித்திருக்கிறார்கள் நெய்வேலிப் போலீஸ் வீரர்கள்!

கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள யந்திர சாதனங்களுடன்கூடிய மாபெரும் நிலக்கரிச் சுரங்கமும், அதையொட்டி நடைபெறும் பெரும் தொழிற்சாலைகளும் அந்த ஊரிலே இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது, தனிப்பட்ட திரு. கிருபானந்த வாரியாரைக் காப்பாற்ற முடியாத **நெய்வேலிப் போலீசார்**, நாளை ஒரு குமுறல் என்றால் அந்த விலைமதிப்பற்ற பொக்கிஷங்களை எப்படிக் காப்பாற்று வார்களோ! தமிழக அரசுக்கே வெளிச்சம்!

ஆளும் கட்சியைச் சேர்ந்த சாதாரண நபர்களுக்குக் கூட போலீஸ் எந்த அளவுக்குப் பயந்து நடுங்குகிறது? சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க வேண்டிய போலீஸார் தங்களது உத்தியோக பூர்வமான கடமையை மறந்து, தி. மு. க. த் தொண்டர்களாகியிருக்கின்றனர் என்பதையே, மிருகத்தனமான இந்தக் கொடுமை எடுத்துக் காட்டுகிறது!

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், 'பகுத்தறிவு' வாதிகளுக்கு —'இரண்யக்குஞ்சு'களுக்குப் பிடிக்காத ஆஸ்திகப் பழமாக இருக்கலாம்.

ஆனால், அவர்...சமயச் சொற்பொழிவாளர் மட்டுமல்ல. இலக்கியப் புலமை மிக்க தமிழ்க் கடல் அவர்! மிகப் பெரிய விஷயங்களையும் கூட சாதாரண மக்களும் புரிந்து கொள்ளத் தக்க வகையில் — சுவையான தமிழில் —நகைச்சுவையோடுஎடுத்து விளக்கும் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபி அவர்!

சாதாரண மக்களையும் சமயச் சொற்பொழிவைக் கேட்க வைத்து, முரண்பாடான கொள்கை யுடையோரையும் — அதாவது எதிரியையும் சிரிக்க வைக்கும் இனிய தமிழில் — எளிய தமிழில் எடுத்துக் கூறி அரசியல் உலகம், ஆத்திக உலகம், கலையுலகம், இசை உலகம், இலக்கிய உலகம், படித்த உலகம், படிக்காத உலகம் ஆகிய இத்தனை உலகத்திலும் ஏராளமான ரஸிகர்களை ஏற்படுத்திக் கொண்ட பிரபலமான பெரிய நட்சத்திரம் அவர்!

இன்னும் சொல்லப் போனால், சினிமா நட்சத்திரங்களுக்கெல்லாம் கூட இளைஞர்களிடம் மட்டுமே செல்வாக்கு உண்டு! ஆனால் எல்லா வயதினரும் இவரது ரஸிகர்கள்! அவர்கள் விரும்பும் அபிமான நட்சத்திரம்!

அப்படிப்பட்டவர் உயிரைப் பற்றி விளக்கம் தரும்போது தத்துவரீதியாக திரு. அண்ணாத்துரையின் மரணம் பற்றியும் உதாரணம் காட்டிப் பேசியிருந்தாலும், அதிலென்ன தவறு இருக்க முடியும்? அப்படிப் பேசாமலிருந்தும், பெருந் தன்மையோடு மன்னிப்புக் கேட்டிருக்கிறார் அந்தப் பெரிய மனிதர்! என்னைப் பொறுத்தவரை அவர் மன்னிப்புக் கேட்டது தான் பெரிய தவறு என்கிறேன். அவர் கேட்டுவிட்டார் அராஜகத்திற்கு பயந்து! அதோடு விடாமல் ஆட்சி கையிலிருக்கிறது என்ற தைரியத்தில், போலீஸ் ஒன்றும் செய்யாது என்ற நம்பிக்கையில் வீடு புகுந்து............ அடித்திருக்கிறார்கள். அந்த வீட்டுக்காரரையும் ரத்தக்காயம் ஏற்படும் அளவுக்குத் தாக்கியிருக்கிறார்கள்.

இதை இப்படியே விட்டுக் கொண்டு போனால், நாளை திரு. ம. பொ. சிக்கும் இதே அனுபவம் ஏற்படலாம்! ஏனெனில் அவரும் ஒரு சில இடங்களில் சமயப் பிரச்சாரம் செய்கிறார்.

ஏன்– 'மூதறிஞர் -வழிகாட்டி' என்றெல்லாம் இன்று தி. மு. க. வினர் போற்றித் துதிக்கும் ராஜாஜி கூட, பச்சை ஆஸ்திகப் பிரச்சாரகர்தான்! அவரது பேச்சும் எழுத்தும் கதாகாலட்சேபங்களாகவே, பகவானின் பெருமை பகரும் சமயப் பிரச்சாரங்களாகவே இருக்கின்றன! அவருக்கும் இந்தக் கதி வரலாமல்லவா?

தி. மு. க. வோடு கட்டிப் புரளும் திரு. ம. பொ. சி. யும், திரு ராஜாஜி அவர்களும், நெய்வேலிக் காட்டுமிராண்டித் தனத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் ?

புராண காலத்தில் ரிஷிகளின் யாகத்தைக் கலைக்க அசுரர்கள் புரிந்த அராஜகங்களைப் படித்திருக்கிறோம் ! அதை விடக் கொடுமையான நவீன அரக்கர்களின் அராஜகமாக இருக்கிறது நெய்வேலிக் காலித்தனம் !

சமய வழியில் தமிழ் வளர்க்கும் ஒரு பெரியவரை இப்படியா அடித்து அவமானப்படுத்தி ஊரைவிட்டுத் துரத்துவது ? தமிழுக்கு நாங்களே ஏகபோக வாரிசு என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தி. மு. க. தம்பிகளுக்கு இது அழகா ?

இந்த ஒரு சம்பவத்தினால் 'சட்டம், ஒழுங்கு கெட்டுவிடவில்லை' என்று அமைச்சர்கள் அடுக்கு மொழியில் பதில் கூறலாம். போலீஸ் அதிகாரிகளை விட்டு வழக்கம் போல அறிக்கை வெளியிடச் செய்யலாம். ஆனால் இந்த சமாதானங்களெல்லாம் வழக்கமான பழைய 'பல்லவி'யாகத்தான் கருதப்படுமே தவிர, நடந்து விட்ட காலித்தனத்திற்குப் பரிகாரமாகாது.......

''கிருபானந்த வாரியார் அவர்கள் சமயப் பிரச்சாரத்தில் அரசியலைக் கலந்து கிண்டலாகப் பேசுவது வாடிக்கைதான்''

என்று முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி சட்டசபையில் சமாதானம் கூறியிருக்கிறார். ஏன், அரசியல் வாதிகள் புராணத்தைக் கலந்து கிண்டல் செய்வதையே பிழைப்பாக வைத்திருக்கும் பொழுது, சமயப் பிரச்சாரகர்கள் அரசியல் கலந்து பேசக் கூடாதென்று எங்காவது சட்டமிருக்கிறதா, என்ன?

ஏன், இன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதியே — இன்று மூதறிஞராக ஏற்றுக் கொண்டுள்ள இராஜாஜி அவர்கள் எழுதிய 'சக்ரவர்த்தித் திருமகனு'க்கு எதிராக, அவரது **'முரசொலி'** வார இதழில், **மூக்காஜி** என்ற பெயரில், புராண நாயகர்களை மட்டுமல்ல, அதை எழுதிய இராஜாஜியையும் சேர்த்து எத்தனை கேவலமான முறையில் ஆபாசப் படங்களுடன் தொடர் கட்டுரைகள் எழுதியிருக்கிறார் ? எடுத்துப் போடட்டுமா ஆதாரங்களை? எத்தனை அரசியல் மேடைகளில் புராண நாயகர்களைக் கிண்டல் செய்திருக்கிறார் ? வேண்டுமா விவரங்கள்? ஏன்? சமீபத்தில் நடந்து முடிந்த நாகர் கோவில் தேர்தலில் கூட 'கல்லறைக் கதை' ஒன்று சொன்னாரே, அது என்ன நேற்று நடந்த சமூகக் கதையா?

இவரிருக்கட்டும்; இவரது அண்ணன் திரு. அண்ணாத்துரை அவர்கள் பேசிய அரசியலைக் கேளுங்கள் :

''அவர் கடலை அடக்கினார், காற்றை விரட்டினார். கருநாகத்தை மாலையாக அணிந்தார். கந்த மூலமே அவருக்கு உணவு. தொட்டார், பட்டமரம் துளிர்த்தது; பார்த்தார், மலடி தாயானாள்; குருடன் பார்வை பெற்றான்; இப்படிப்பட்ட கதைகளைக் கேட்டு கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடு நமது நாடு! இந்த 'மகிமைகளை யும்' 'அற்புதங்'களையும் வியந்து பேசுவது, பிறகு எதற்குப் பயன் படுகிறது? 'அவர் மகான், ஆகவே அப்படிச் செய்தார். நாம் சாமான்யர். நம்மால் முடியுமா அவர் செய்ததைச் செய்ய?'

என்று பேசி நமது செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக் கொள்ளவே அது மெத்தவும் பயன்படுகிறது!

—[திரு அண்ணாத்துரை. 2-10-67 சென்னை 'வானொலி'யில்]

இது என்ன அரசியல் பேச்சா ? சமயப் பிரச்சாரகர்கள் அரசியல் பேசக் கூடாது என்றால், அரசியல் பிரசாரகர்கள் மட்டும் புராணத்தைக் கிண்டல் செய்யலாமா ? அரசியல் வாதிக்குப் புராணத்தைக் கிண்டல் செய்யும் உரிமை உண்டென்றால் — சமயவாதிக்கு அரசியல் வாதிகளைக் கிண்டல் செய்யும் உரிமை உண்டு. இதை இன்றைய முதலமைச்சர் உணர வேண்டும்.

மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழாவிலே பேசிய காலஞ்சென்ற திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், திரு. அண்ணாத்துரை அவர்களைப்பற்றி மிகக் கடுமையான மொழியில் சாடினாரே, ஏன்? புராணங்களை— பக்திமான்களை —ஆஸ்திகர்களைக் கிண்டல் செய்து பேசியதற்காகத் தானே?

இது போன்ற ஆயிரமாயிரம் ஆதாரங்களை எடுத்துக் காட்ட முடியும்? ஆட்சிக்கு வந்து விட்டதற்காக—ஏதோ ஆஸ்திகக் கொள்கையை எதிர்க்காத பக்திமான்களைப் போல வேஷம்போடுவதை யாரும் நம்பிவிட மாட்

டார்கள்! எனவே அந்தக் கதைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு, ஆஸ்திகரோ நாஸ்திகரோ யாராக இருந்தாலும், எந்த ஒரு பிரஜைக்கும் அரசு கொடுக்க வேண்டிய பொதுப் பாதுகாப்பை அளிக்க ஆவன செய்ய முன் வருவாராக!

ஏசுவையே சிலுவையில் அடித்தும் சாகாத சமயம், நபிகள் நாயகத்தையே கல்லால் அடித்தும் அழிக்க முடியாத மதம், காந்தியடிகளையே சுட்டுக் கொன்றும் சாய்க்க முடியாத ஆத்திகம், தமிழ்க் கடல் கிருபானந்த வாரியார் அவர்களைத் தாக்கியதன் மூலம் சாய்த்துவிட முடியாது; சாகடித்துவிட முடியாது! 'இரண்யக் கூட்டம்' வெற்றி பெற்றுவிட முடியாது.

ஊர் முழுதும் சுற்றி, உடல் நோகக் கத்தி, தமிழ்த் தேனை அள்ளிக் கொடுத்ததுமல்லாமல், தனது வருமானம் முழுவதையும் அறப்பணிக்கே அர்ப்பணித்த வள்ளல் அவர். அப்படிப்பட்டவருக்கே இந்த மரியாதை என்றால், நல்லவர்கள் இதைப் பொறுக்க முடியாது. நாடும் நீண்டநாள் தாங்கிக் கொண்டிருக்காது! புதிய முதல்வர் பொறுப்போடு புரிந்து கொள்வாராக! நடந்துவிட்ட பாதகத்திற்கு பரிகாரம் தேட விரைந்து செயல் படுவாராக!

—தமிழ் சினிமா (1-3-69)

சத்ய கங்கை

......''நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம் — எம்பிரான் நமச்சிவாயமே எம் தெய்வம்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்ட நாவுக்கரசர் பெருமானை கற்றூணில் பூட்டிக் கடலில் தள்ளிற்று நாத்திக உலகம்.

பக்த சிரோமணி திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களை மட்டும் லேசில் விட்டு விடுமா? ''மரணம் வருவது நிச்சயம். அரசர் கோனும் ஆண்டியும் ஒரு நாள் மரணமடைவது நிச்சயம். இருக்கும்போதே செந்தில் மைந்தன் திருவருளை நினைத்து உய்வோம்'' என்று வாரியார் பெருமான் சமீபத்தில் நெய்வேலியில் ஜனங்களுக்கு அறிவுறுத்தினர்.

தம்முடைய கூற்றுக்கு ஆதரவாக, சமீப காலத்தில் நாட்டிலுள்ள அனைவர் நெஞ்சையும் குலுக்கிப்போட்ட பேரிழப்பை உதாரணமாக எடுத்துக் காட்டினர்.

அந்தப் பேரிழப்பை மகிழ்ச்சியுடன் அவர் எடுத்துக் காட்டினர் என்று நம்பின கூட்டம் ஒன்று இருந்தது என்றால், அந்த மடமைமிக்க மனிதர்களுக்காக இரங்காமல் வேறு என்ன செய்வது?

—சத்ய கங்கை (1-3-69)

திருச்சிற்றம்பலம்

பொய்யாத மொழியுமயல் செய்யாத செயலும்வீண்
போகாத நாளும் விடயம்
புரியாத மனமும், உள் பிரியாத சாந்தமும்,
புந்தி தளராத நிலையும்,
எய்யாத வாழ்வும், வேறெண்ணாத நிறைவும், நினை
யென்றும் மறவாத நெறியும்,
இறவாத தகவும், மேற் பிறவாத கதியும், இவ்
ஏழையேற் கருள்செய் கண்டாய்
கொய்யாது, குவியாது, குழையாது, மணம் வீசும்
கோமளத் தெய்வ மலரே!
கோவாத முத்தமே! குறையாத மதியமே!
கோடாத மணி விளக்கே!
ஐயானனங் கொண்ட தில்லையம் பதிமருவும்
அண்ணலார் மகிழும் மணியே!
அகிலாண்ட மும்சரா சரமும்ஈன் றருள்பரசி
வானந்த வல்லி உமையே!

—திருவருட்பா

கண்டனங்கள் வலுக்கின்றன

திரு. காமராஜர்:

கிருபானந்தவாரியார் தாக்கப்பட்டது கண்டிக்கத் தக்கதாகும். வாரியார் தமது விரிவுரையில் அண்ணாதுரையின் மறைவு பற்றிக் குறிப்பிட்டதாகத் தாக்கியிருக்கிறார்கள். அப்படியே அவர் அண்ணாதுரை மறைவு பற்றிக் குறிப்பிட்டு இறைவன் தான் மனிதர்களின் விதியை நிர்ணயிக்கிறான் என்ற முறையில் பேசியிருந்தாலும் தவறில்லை. தம்மைத் தாக்க வந்த கூட்டத்திடம் வாரியார் மன்னிப்புக் கேட்டதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.


—நவசக்தி (24-2-69)

பயங்கர நிலை

அண்ணாத்துரையார் படத்தைக் கைகூப்பி வணங்கச் சொல்லிக் கிருபானந்தவாரியார் நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட செய்தியைப் படித்திருப்பீர்கள்.

மறுத்திருந்தாரானால் ஏறத்தாழ முந்நூறு பேர்கள் அடங்கிய ஆளவந்த வன்முறைக் கூட்டம் வாரியாரை அண்ணா சென்ற இடத்திற்கே அனுப்பியிருப்பார்கள் என்ற ஒரு பயங்கர நிலை.

—கடிதம்(1-3-69)



திரு. எம். பக்தவத்சலம்:

கிருபானந்தவாரியார் போன்ற மேதைகள் தாக்கப்படுவது, ஆட்சியாளர்களுக்கு நல்லதல்ல. இந்தப் போக்கை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். பொறுத்துக் கொள்ளவும் மாட்டார்கள். ஜனநாயகமும் அனுமதிக்காது...

நம்மைப் பொறுத்தவரை நாம் உஷாராக இருக்க வேண்டும். இதைப் பார்த்துக் கொண்டிருந்தால் மேலும் தொல்லைகள் ஏற்

படும். வாரியார் தாக்கப்பட்டதை ஒரு எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும்.......

கிருபானந்தவாரியார் தாக்கப்பட்டது குறித்து முதன் மந்திரி தெரிவித்த கருத்து சரியானதாகத் தெரியவில்லை. அவரும் ஒரு கலைஞர். ஒரு கலைஞர் தாக்கப்பட்டது குறித்து மற்றொரு கலைஞரான முதல் மந்திரி கூறியிருக்கும் கருத்து, வன்முறைகளை மேலும் தூண்டுவதுபோல் தான் இருக்கிறது. அவர் அந்த எண்ணத்தில் சொல்லியிருக்க மாட்டார் என்றாலும், அவருடைய பேச்சு அத்தகையதாக இருக்கிறது.

நான் தொலைபேசி மூலம் இன்று வாரியாரிடம் பேசினேன். முதல் மந்திரி கூறியிருப்பது போல் அண்ணாத்துரையைப் பற்றியோ, நெடுஞ்செழியனைப் பற்றியோ பேசவில்லை என்று என்னிடம் சொன்னார்.

அதுமட்டுமல்ல.''ஒரு தேதியில் தஞ்சையில் நான் பேசியதாக முதல் மந்திரி சொன்னதும் தவறு. அந்தத் தேதியில் நான் அங்கு இல்லை. சிவகாசியில் அல்லவா இருந்தேன்?'' என்றும் சொன்னார்.

அதுமட்டுமல்ல; வாரியாரைக் கட்டாயப்படுத்தி இந்த வெறியர்களே எழுதிக் கொண்ட கடிதத்தில் கையெழுத்துப் போடச் செய்திருக்கிறார்கள். அவரும் துன்புறுத்தலுக்குப் பயந்து வேறு வழியில்லாமல் கையெழுத்திட்டிருக்கிறார்.

நெய்வேலி தி. மு. க. செயலாளர் விடுத்துள்ள அறிக்கை, முதன் மந்திரி கூறியதை மேலும் உறுதிப்படுத்துவதற்காக அவரை இங்கு வரவழைத்து அறிக்கை வெளியிடச் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். இதற்கிடையில், வன்முறை நடந்தது தவறு தான் என்று சொல்லிச் சப்பைக் கட்டுக் கட்டுவது சரியானதல்ல.

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்றால் ஆட்சி எதற்கு? நாகரிகமான நாட்டில் தானா நாம் வாழ்கிறோம்?

—நவசக்தி (28-2-69)



திரு. சி. சுப்பிரமணியம்:

திடீரென்று ஆத்திரமடைந்து தாக்கியிருந்தால் நாம் புரிந்து கொள்ளமுடியும். ஆனால் நெய்வேலியில் தாக்குதல் ஒருநாள்கழித்து நடந்திருக்கிறது. நன்கு யோசித்து எல்லாம் திட்டம் போட்டு இத் தாக்குதல் நடந்திருக்கிறது.

இம்மாதிரி தாக்குவது தவறு என்று தி. மு. க. வினர் நினைப்பதாகத் தோன்றவில்லை. இது தான் இதில் மிகவும் துர்ப்பாக்கியமானது.

—நவசக்தி (1-3-69)

திரு. பி. ஜி. கருத்திருமன்:

பாதுகாப்புக் கொடுப்பதற்காகத்தானே போலீஸ் இருக்கிறது? அந்த இடத்தை விட்டு ஓடி விடு என்று சொல்வதற்கா போலீஸ் இருக்கிறது? கிருபானந்தவாரியார் தம் விரிவுரை நிகழ்ச்சிக்குப் பின், 12 மணி நேரத்திற்குப் பின்பு கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிறார். அந்த இடத்தில் இரகசியப் போலீஸ் என்ன செய்து கொண்டிருந்தது?

இந்த அரசாங்கத்தில்(தி.மு.க) நடந்து கொண்டிருக்கிற வன்முறைகளை அடக்கப் போகிறார்களா, இல்லையா? நடவடிக்கை எடுக்கப் போகிறார்களா, இல்லையா? என்பதுதான் கேள்வி.

நவசக்தி (25-2-69)

•

வாரியாரைத் தாக்குவது சுலபம். ஆனால் அவர் தாக்கப்பட்டது இந்த ஆட்சிக்கு ஓர் அபசகுனம். அவர் மீது பட்ட அடி கோடானு கோடி ஆஸ்திகர்கள் மீது பட்ட அடி. அவர்மீது பட்ட அடி என்மீது பட்ட அடியாகவே கருதுகிறேன். ஒருவர் தன் கருத்தைச் சொல்லக் கூட இந்த நாட்டில் உரிமையில்லையா?

—நவசக்தி(26-2-69)



திரு. கக்கன் அதிர்ச்சி

சென்னை பிப். 22—நெய்வேலியில் கிருபானந்த வாரியார் தாக்கப்பட்ட செய்தி தமிழ்நாடு காங்கிரஸ் துணைத் தலைவர் கக்கனுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.

கிருபானந்த வாரியாரைப் போன்ற நல்லவர்கள் தாக்குதலுக்குள்ளாகக் கூடிய ஒரு நிலைமை தமிழ்நாட்டில் தோன்றியிருப்பது தமக்கு மிகவும் கவலையைத் தருகிறது என்றும், தாக்குதல் நடந்த பொழுது போலீசார் போதிய பாதுகாப்புத் தரவில்லை என்று அவரே கூறியிருப்பதை அதிகாரத்திலுள்ளவர்களின் கவனத்திற்குத் தாம் கொண்டு வர விரும்புவதாகவும், இம் மாதிரி சம்பவங்கள் நடை பெருமல் இருக்க தக்க நடவடிக்கைகளை அவர்கள் எடுப்பார்களென்று தாம் நம்புவதாகவும் கக்கன் சொன்னுர்.

—நவசக்தி (23-2-69)

கவிஞர் கண்ணதாசன்:

நல்லறிவாளர்களின் இரத்தத்தைக் கொதிக்க வைக்கும் சம்பவம் நெய்வேலியில் நடைபெற்றிருக்கிறது. கிருபானந்தவாரியார் அவர்கள் நெய்வேலியில் சமயச் சொற்பொழிவாற்றச் சென்றிருக்கிருர்கள். முதல் நாள் அவர்கள் பேசும்போது விதியின் வலிமையைப் பற்றிப் பேசியிருக்கிருர்கள். ''கடவுள் ஒரு முடிவு கட்டி விட்டால் மனிதன் அதை என்ன செய்ய முடியும்? மனிதனின் முடிவுநாளை இறைவன் எழுதி வைத்து விட்டால் மருத்துவர்கள்தான் என்ன செய்ய முடியும்?'' என்று இறைவனின் பொது நீதியை விளக்கிப் பேசியிருக்கிருர்கள். எந்த ஒரு மனிதனையும் பற்றி அவர்கள் குறிப்பிட்டுப் பேசவில்லை. அப்படி இருந்தும், அந்தப் பந்தலிலே சில தி. மு. க. வினர் சலசலப்புக் காட்டியிருக்கிருர்கள்.

''நான் அண்ணுத்துரையைப் பற்றிச் சொல்லவில்லை. அப்படி யாராவது எண்ணியிருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று வாரியார் அவர்கள் பெருந்தன்மையுடன் அறிவித்திருக்கிருர்கள். ஒரு ஜனநாயக நாட்டில் இந்த அறிவிப்பே கூடத் தேவையில்லாதது ஆகும். தேசத்திற்கு வாழ்வு தந்த நேருவையே அவரது மரணத்திற்குப் பிறகு இவர்கள் விமர்சித்த போது, யாரும் சலசலப்புக் காட்டியதில்லை. அப்படியிருக்க, இறைவனின் பொது நியதியை விமர்சித்ததற்கேகூட மன்னிப்புக் கேட்டார் வாரியார். அதோடு விட்டு விடுவார்களா ஆட்சியைக் கையிலே வைத்திருப்பவர்கள்? நெய்வேலி போலீஸ் இலாகாவிலுள்ள ''பெண் பிள்ளைகள்'' அவருக்குப் பாதுகாப்புத் தரவில்லை யென்பது மட்டுமல்ல; ஊரை விட்டுப் போய் விடும்படி அவருக்கு உபதேசித்திருக்கிருர்கள்.

இந்தக் கொடுமை வேறு எந்த நாட்டிலாவது நடந்திருந்தால், காலிகள் நொறுக்கப்பட்டிருப்பார்கள். அண்ணுவைப் பற்றி விமர்சனமே கூடாது என்று இவர்கள் கருதுவார்களாஞல், விளைவு விபரீதமாக முடியும். மேடைக்கு மேடை அந்த விமர்சனம் வலுப்பெறும். மறைந்தவருக்குச் சாதாரண மரியாதை கூட இல்லாமல் போய் விடும். யார் அந்த வாரியார்? தமிழகத்தில் அறிவுக்கடல் என்ருல்,

அவர் ஒருவரே. அவரை மிஞ்சிய ஒரு அறிஞன் இனிப் பிறக்கப் போவதில்லை. பல குடும்பங்களைப் பாழடித்து ஒருவருக்குச் சொத்து சேர்க்கப் பயன்பட்ட சுயமரியாதை இயக்கத்தை மரணப் படுகுழியில் விழ வைத்தவர் அவர். எந்த அரசியல் கட்சியிலும் அவருக்குச் சம்பந்தம் இல்லை. ஆனால் அவர் சொன்னால் வாக்களிக்கக் கூடியவர்களே தமிழகத்தில் ஐம்பது இலட்சம் பேர் இருப்பார்கள்.

வைதிக உலகம் அவரை ''சுவாமிகள்'' என்றே வணங்கி வருகிறது. அவரது இலக்கிய — சமயச் சொற்பொழிவுகளில் பல முறை நானே மெய்மறந்து நின்றிருக்கிறேன். நானே அவரது சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்து கேட்டு அமைதியடைந்திருக்கிறேன். எந்தப் புலவனுக்குமில்லாத தமிழ்த்திறமை அவருக்குண்டு. திருக்குறளில் நாலு பாட்டுப் படிக்காதவன்கூட, வள்ளுவனைப்பற்றிப்பேசித் தன் தற்குறித்தனத்தைக் காட்டிக்கொள்ளும் உலகமிது. வாரியாரோ ஆயிரத்து முந்நூற்று முப்பது திருக்குறளையும் அறிந்தவர். கம்பனை முழுதும் உணர்ந்தவர். சிலப்பதிகாரத்தைத் தெளிவுறக் கற்றவர். அவர் கல்லாதது ஒன்றில்லை; சொல்லாதது ஒன்றில்லை. திரு. இராமசாமி நாயக்கர் அவர்கள்கூட, முன்பெல்லாம் ''கேட்டால்வாரியார் பிரசங்கத்தைக் கேளுங்கள்'' என்பாராம்.

சம்பாதித்த சொத்தையெல்லாம் அறப்பணிக்கே கொடுத்து விட்ட உத்தமர் அவர். அவருக்கு நேர்ந்த இந்த நிலை, நாகரிக மக்களுக்கு, அவர்களுடைய கருத்துச் சுதந்திரத்துக்கு விடப்பட்ட சவாலாகும். வைதிக மக்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். இதுவரை நூற்றுக்கணக்கானவர்கள் தொலைபேசியில் என்னுடன் பேசிவிட்டார்கள். சட்டசபையிலுள்ள காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் இதற்கு என்ன செய்யப் போகிறார்கள்? தமிழக இளைஞர் காங்கிரஸ் என்ன செய்யப்போகிறது? இதைச் சாதாரணமாக விட்டுவிடுவது ஜனநாயகத்திற்கும், நாகரிகத்திற்கும் ஆபத்து என்பது மட்டுமல்ல; காங்கிரஸ்காரனது கருத்துச் சுதந்தரத்துக்கும் ஆபத்து ஆகும். சட்டசபையிலுள்ள எல்லா எம். எல். ஏ.க்களிடமும் இதன் கடுமையான எதிரொலியை நான் எதிர்பார்க்கிறேன்.

இனி ஒரு நிகழ்ச்சி இப்படி நடைபெறக் கூடாது. இன்றைக்கு வாரியார், நாளைக்குத் தீக்ஷிதர் என்று சமயவாதிகளிடமும் காலித்தனம் நீடிக்க விடக் கூடாது. தமிழக இளைஞர் காங்கிரஸ், அல்லது தமிழ்நாடு காங்கிரஸ் இது பற்றி என்ன செய்யப் போகிறது? நாடு முழுவதும் கண்டனக் கூட்டங்கள் — எதை விமர்சனம் செய்யக் கூடாதென்று கருதுகிறார்களோ அதைப் பற்றியே விமர்சனங்கள் — தொடர வேண்டும். இதிலேகூட நமக்கு உணர்ச்சி வராமல் போனால் — உட்பொருள் புலனாகாமல்போனால் — நாம் அரசியல் நடத்துவதைவிட வேறு உருப்படியான காரியங்களைச் செய்யலாம்.

—கடிதம் (24-2-69)

கிருபானந்தவாரியார் தாக்கப்பட்டதற்கு வருத்தம் தெரிவிப்பதற்குப்பதிலாக, நியாயம் கற்பித்திருக்கிறார் நமது முதலமைச்சர்.

அண்ணாவைப் பற்றி அவர் கிண்டலாகப் பேசினாராம்.

'மில்லரே வந்தாலும் கூட வெல்ல முடியுமா விதியை?' என்று கேட்டாராம்.

அவர் அடிபட்டதற்கு இது தான் காரணமாம்.

இன்னொன்றையும் சொல்லு கிறார் கருணாநிதி.

ஏற்கெனவே தஞ்சாவூரிலும் இப்படி ஏதோ வாரியார் பேசிய தாக இவர்கேள்விப்பட்டாராம்.

கருணாநிதியின் பேச்சைப் பார்த்தால், நெய்வேலி நிகழ்ச்சி மந்திரிகளாலேயே திட்டமிடப் பட்ட நிகழ்ச்சிபோல் தோன்று கிறது.

தஞ்சாவூரில் பேசியதற்குப் பிரதியாக நெய்வேலியில் ஏற் பாடு செய்திருக்கிறார்கள் போலி ருக்கிறது.

கழக மேலிடத்துக்கு நெய் வேலி நிகழ்ச்சியில் சம்பந்தம் உண்டு என்பதைத் தெளிவுபடுத் தியதற்காக, நாம் கருணாநிதிக்கு நன்றி சொல்ல வேண்டும்.

யாரையும் விமர்சனம் செய்ய- கேலி செய்ய-யாருக்கும் உரிமை உண்டு இந்த ஜனநாயகத்தில்!

ஆண்டவனையே கேலி செய்து வளர்ந்தது சுயமரியாதை இயக் கம்.

ஆண்டவனையே கேலி செய்து வளர்ந்தவர் அண்ணா.

அண்ணா ஆண்டவனை கேலி செய்யலாம்;

வாரியார் அண்ணாவின் விதி யைக்கூட விமர்சிக்கக்கூடாதோ?

வாரியாரைச் சுற்றி நின்று காப்பதற்குத் தொண்டர்கள் இல்லை.

அதனால் அவருக்கு இந்த கதி.

....

'அப்படிப் பேசினார்; அதனால் இப்படி நடந்தது' என்று விளக் கம் தருகிறவர், தானும் அந்த அனுபவத்தைத் திரும்பப் பெற முடியும்.

அப்படிப் பேசினால் இப்படித் தான் நடக்கும் என்பது விதி யாகிவிட்டால், அந்த விதியில் காங்கிரஸ்காரனும் பங்கு பெறு வான்.

—கடிதம் (26-2-69)

நாற்பத்திரண்டு ஆண்டுகளா கச்சமயத்துறைக்கேதம்மை அர்ப் பணித்து சேவை செய்து வரும் ஆத்திகப் பெரியார் வாரியாரை அடித்திருக்கிறார்கள்.

''அறுபத்துமூன்று நாயன்மார் கள்தான் உண்டு. ஆனால் 64'ம வரை இங்கே காண்கிறேன்'' என்றுகாஞ்சிபெரியவாள்யாரைக் குறிப்பிட்டாரோ, அந்தப் பெரிய வர் வாரியாரை தாக்கியிருக் கிறார்கள்.

அண்ணாத்துரை ஆண்டவனை நிந்தித்தவர். ஆனால் கடைசி காலத்தில்திருத்தணிக் கோயிலுக் குச் சென்று மனமுருக முருகன் எதிரே நின்றிருக்கிறார். விதியின் விளையாட்டில்லையா இது?

பகவான் இரமணருக்குப் புற்று நோய் வந்தபோது கேலி பேசி னார் அண்ணாத்துரை. நடந்தது என்ன? விதியை வெல்ல முடிந் ததா?

காலமெல்லாம் வடநாட்டார் களை ஏசியவர் அண்ணாதுரை. 'யாரும் இதை மறக்க முடியாது.

கடைசியில் நடந்ததென்ன?

வட நாட்டவரான உஜ்ஜல்சிங் கும், அவரது துணைவியாரும்

கடைசிவரை அருகிலேயே இருந்தனர். இவரது உயிர் பிழைக்க அவர்கள் பிரார்த்தனை நடத்தினார்கள்.

நமது ராணுவத்தைப் பற்றி அண்ணாத்துரை கூறியது என்ன? 'இந்த ராணுவத்தைத் தெரியாதா? சீனாக்காரனிடம் அடிவாங்கிய ராணுவம் தானே?' என்று பேசினார்.

ஆனால் விதி என்ன செய்தது?

எந்த ராணுவத்தைக் கேலி பேசினாரோ, அந்த ராணுவத்தினர்தான் இவர் சடலத்தைத் தாங்கினார்கள்.

—நவசக்தி (27-2-69)

தெரிந்தோ தெரியாமலோ இராஜாஜி தி. மு. கழகத்தினரை ஆட்சியில் கொண்டுவந்துவைத்து விட்டார். ஆனால் தி. மு. க. வினரின் போக்கு குறித்து இப்போது மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கிறார்.

இன்று வாரியார் போன்ற பெரியவர்களுக்கு ஏற்பட்ட நிலைமையைப் பார்க்கும்போது, நாளை இதே நிலைமை இராஜாஜிக்கேகூட ஏற்படுமோ என்று தோன்றுகிறது.

நவசக்தி (1—3—69)

கவி கா. மு. ஷெரீப்:

கிருபானந்தவாரியார் தாக்கப்பட்டதன் மூலமாக, போலீஸார் வாளா இருந்ததன் மூலமாக, இந்த தி. மு. க. ஆட்சி தன் சுயரூபத்தினைக் காட்டிவிட்டது. அண்ணாத்துரை இருந்தபோது இது மறைமுகமாக இருந்தது. சிதம்பரத்தில் நெடுஞ்செழியன் கோவில் பிரசாதத்தை என்ன செய்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். அண்ணாதுரை ஆட்சியில் கடவுள் படத்தினை அகற்ற வேண்டி அனுப்பிய இரகசிய உத்தரவு; நகரசபையின் தெருக்கோயில்களை அகற்றும் மும்முரம்; இந்த நிலையில் வாரியார் தாக்கப்பட்டது திட்டமிட்ட செயல்தான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

—நவசக்தி (25—2—69)

திரு கே. இராமதாஸ்:

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து...என்பதுபோல, தி. மு. க. வினர் இன்று ஆத்திகம் பேசுகின்ற சாதுக்களையும் கூடத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

கிருபானந்தவாரியார் செய்த குற்றம்தான் என்ன? தத்துவம் பேசியது, உண்மையாகப் பேசியது, தவறு ?......

மக்களை மதிக்கும் அரசாயிருப்பின், வாரியாரைத் தாக்கியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். தர்மம் நிலைக்க வேண்டுமானால், பத்திரிகைகள் கயவர்களைக் கண்டு பிடிக்கும் வரை குரலெழுப்ப வேண்டும்.

—நவசக்தி (25—2—69)

குமரி அனந்தன் :

தி. மு. க. ஆட்சியில் வன்முறை தேர்தல் களத்திலேயிருந்து நெற்களத்திலே பரவி இப்போது நடு நிலையாளர்களது வாழ்க்கையைக் குலைக்கவும் தொடங்கி இருக்கிறது.

வாரியார் உண்மையில் கருத்து முத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ள வாரிதான். வாரி என்றால் கடல் என்று பொருள். கடலன்ன தமிழறிவும் பற்றும் கொண்டவர். குற்றம் காணுமிடத்துச் சுட்டிக்காட்டும் பண்பு படைத்தவர் வாரியார். இத்தனை

நாட்களும் வாய்மூடி இருந்த ம. பொ. சி. கூட, இப்போது வாரியார் தாக்கப்பட்டதைப் பற்றி பேசும்போது, காங்கிரஸ் காரர்களையும் கிண்டல் பண்ணு வார் வாரியார் என்று பேசியுள் ளார். ஆனால் எந்தக் காங்கிரஸ் காரனும் வாரியாரைத் தாக்கிய தில்லை.

நெய்வேலியில் தி. மு. க வைப் பற்றிப் பேசவில்லை வாரியார். விதியினைப்பற்றிச் சொன்னார்.

.........விதியை மாற்ற எந்த டாக்டர்களாலும் முடி யாது என்று சொன்னதால் என்ன தவறு?

காய்ச்சலாக இருந்த வாரி யாரைத்தாக்கினார்கள் காலிகள். அவர் வணங்கும் தெய்வ விக்ர கங்களுக்கு அவமரியாதை செய் தார்கள்.

இந்தக் கொடுமைக்கு முத லமைச்சர் கொடுக்கும் விளக்க மென்ன?

பண்பாடற்ற முறையில் பேசி னார் வாரியார் என்கிறார். இதற்கு முன்பும் இப்படிப் பேசி யிருக்கிறார் என்று சான்று கூறு கிறார். ''இத்தாக்குதல் நடந்தது சரியே! இப்படித்தான் செய் வோம்! அண்ணாவைப் பற்றிப் பேசுவதாக எங்களுக்குச் சந்தே

கம் வந்தாலே இப்படித்தான் நடக்கும்'' என்று முதலமைச்சர் பயங்காட்டுகிருரா என்று தெரியவில்லே.

தாக்கப்பட்டது வாரியார் அல்ல. தர்மம் தாக்கப்பட்டது! தமிழறிவு தாக்கப்பட்டது! நீதி தாக்கப்பட்டது! நற்பண்பு தாக்கப்பட்டால் நல்லவர் அதனைப் பொறுப்பதில்லே. எனவே, இளைஞர் காங்கிரஸ் தோழர்களே! கண்டனப் பொதுக் கூட்டங்களை நடத்துங்கள். வாரியார் தாக்கப்பட்டதைக் கண்டித்தும், போலீஸ்காரர்கள் பாதுகாப்புக் கொடுக்கத் தவறியதைக் கண்டித்தும், காங்கிரஸ் தோழர்கள் பேரில் பொய் வழக்குப் போடுவதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றுங்கள். இது முதற் கட்டமே! ஆம்; அநீதியையும் அக்கிரமத்தையும் எதிர்த்தே ஆகவேண்டும்.

நவசக்தி *(1—3—69)*

திரு எஸ். ஜி. விநாயக மூர்த்தி :

தி. மு. க. ஆட்சியில் ஒரு சாதுவுக்குக் கூடப் பாதுகாப்பில்லே. கிருபானந்த வாரியாரைத் தாக்கியவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

—நவசக்தி *(25—2—69)*

திரு டி. எஸ். ஆதிமூலம்:

நெய்வேலியில் திருமுருக கிருபானந்த வாரியார் நிகழ்த்திய பிரசங்கத்தில் அவர் கூறிய சில சொற்கள் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அதையொட்டி அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருக்கிருர். அடுத்த நாள் நிகழ்ச்சியும் ரத்து செய்யப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு அவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று அவரை அவமானப் படுத்தியிருப்பது வேதனைக்குரிய விஷயம். அண்ணுதுரை நடமாடும் பல்கலைக் கழகம் என்ருல், கிருபானந்தவாரியாரும் நடமாடும் பல் கலைக்கழகம். அவர் வட இந்தியாவில் மதப் பிரசங்கியாக இருந்திருந்தால் அவருக்குக் கனகாபிஷேகம் செய்திருப்பார்கள். அப்படிப்பட்ட மதப்பிரசாரகரை ஏதோ கட்சிக்காரர்களும் மக்களும் சேர்ந்து துன்பப்படுத்தி யிருப்பது, தமிழ்நாடு பூராவும் மக்கள் இது பற்றிப்பேசுவதற்கு இடம்கொடுத்து விட்டது. அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமையை நீக்குவதற்காக, அடுத்த ஆண்டு 'பாரத ரத்ன' பட்டத்தை அவருக்கு வழங்கவேண்டும் என, மத்திய சர்க்காருக்குத்தமிழ்நாடுஅரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டும் என்று நான் ஆணித்தரமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தினமணி *(1—3—69)*

திரு. மோகன்லால் மேத்தா :

ஸ்ரீ கிருபானந்த வாரியார் தாக்கப்பட்டது வருந்துதற்குரியதே. அவ்வாறு அவர் நடத்தப்பட்டிருக்கக் கூடாது. சமூகத்தில் அண்ணுவிடம் அதிக மரியாதை உடையவர்கள் கூட, இனி அண்ணுவைப்பற்றி பேச அஞ்சுவார்கள். காரணம், அவர்கள் நல்ல நோக்குடன் கூறுவதையும் தவருகப் புரிந்து கொள்ள வேண்டி வரலாம்.

சுதேசமித்திரன் *(27—2—69)*

திரு. ஆர். சண்முகம் :

கிருபானந்தவாரியார் வன்முறை வெறித்தாக்குதலுக்கு இலக்கானது குறித்து, கருணுநிதியார் என்ன சொல்லப் போகி

றார் என்பதை அறிய மிக ஆவலாக இருந்தோம்.

நாம் எதிர்பார்த்ததற்கு அணுவளவும் பிசகாத விதத்தில் கருணாநிதியார் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

கருணாநிதியார் எப்பொழுதும் கருணாநிதியாக இருக்க முடியுமே தவிர, அண்ணாத்துரையார் ஆக முடியாது என்ற உண்மை, இப்பொழுது முதல் தடவையாக நிரூபணமாகியிருக்கிறது.

கருணாநிதியார் கிருபானந்த வாரியாரைக் குற்றவாளியாக்கப் படாதபாடுபட்டிருக்கிறார்.

அவர் செய்தது தவறுதான் என்று நிரூபிக்க, அளவுக்கு மீறி சிரமப்பட்டிருக்கிறார்!

ஆனால், ஒருவர் தனது கருத்தைப் பொதுமேடையில் சொல்வது வன்முறை வெறியாட்டத்தின் மூலம் தடுக்கப்படுவது, ஜனநாயக நெறிக்கு மாறுபட்ட காட்டு மிராண்டித்தனம் என்பதை ஒப்புக்கொள்ள, அவரால் பூரணமாக இயலவில்லை!

அங்கு நடந்த வன்முறையை ஏதோ பட்டதும் படாததுமாகக் கருணாநிதியார் கண்டித்திருக்கிறார்!

ஒரு மனிதன் எந்தவிதக் கருத்தையும் எப்படித் தெரிவித்தாலும், அதை வன்முறை அடிப்படையில் யாரோ சிலர் தடுப்பது மாபெரும் குற்றம் என்று கருணாநிதியாரால் அடித்துக்கூற முடியவில்லை!

காரணம், அந்த விவகாரத்தில் குற்றவாளிகளாக இருப்பவர்கள் கழகக்கண்மணிகள்!

நெய்வேலியில் நடைபெற்ற வன்முறை நிகழ்ச்சி ஏதோ தற்செயலாக உணர்ச்சி வயப்பட்டுச் சிலர் நடத்திய திருவிளையாடல் என்று, கருணாநிதியார் பேச்சைக் கேட்ட பிறகு நம்மால் நம்ப முடியவில்லை.

கிருபானந்தவாரியார் தாக்கப்பட்டது, நெடுநாட்களாகச் சிந்தித்துத் தீட்டப்பட்ட ஒரு சதித்திட்டம் என்றும், அந்த சதித்திட்டத்தில் முதலமைச்சருக்கும் பங்கு இருக்கக் கூடுமோ என்றும் நாம் சந்தேகப்படுகிறோம்.

கருணாநிதியாரின் கருத்தினைப் பற்றி ஆழ்ந்துயோசித்து ஒரு முடிவுக்கு வந்துதான் நாம் பேசுகிறோம்.

கிருபானந்தவாரியார் நெய்வேலியில் அண்ணாத்துரையாரைப்பற்றி ஏதோபேசினார் என்ற காரணத்தால்தான், தி. மு. க. காலிகளால் அவர் தாக்கப்பட்டார் என்ற செய்திமட்டுமே

நமது செவிகளில் விழுந்திருக்கின்றது.

ஆனால் முதலமைச்சர் காதுகளில் நெய்வேலிச் செய்திக்கும் அதிகமாகப் பல தகவல்கள் விழுந்திருக்கின்றன.

கிருபானந்தவாரியார் 15, 16 தேதிகளில் தஞ்சையில் விரிவுரை நிகழ்த்தும் போதும், அண்ணாத்துரையாரையும் நெடுஞ்செழியனையும் பற்றிப் பேசியிருக்கிறாராம்!

கருணாநிதியாரின் இந்தக் கூற்றிலிருந்து நாம் விளங்கிக் கொள்வது என்ன?

கிருபானந்தவாரியார் மீது முதலமைச்சர் கருணாநிதியார் நெடுநாட்களுக்கு முன்னரே குறி வைத்து விட்டார் என்று தோன்றுகிறது.

கிருபானந்தவாரியார் எங்கு வகையாக மாட்டுவார் என்று முதலமைச்சர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் போலும்.

நெய்வேலியில் அந்த வாய்ப்பு அருமையாக வந்து வாய்த்திருக்கிறது

சீடகோடிகள் 'நல்ல சமயமடா, இதை நழுவ விடலாமா!' என்று வாரியாரை நையப் புடைத்து, மேலிடத்து உத்தரவை நிறைவேற்றி விட்டனர் போலும்!

ஆக, கிருபானந்தவாரியார் தி. மு. க. சீடகோடிகளின் திடீர் ஆவேசத்துக்கு இலக்காகி விடவில்லை!

அவர் திட்டமிட்டு விரட்டிச் செல்லப்பட்டு வேட்டையாடப் பட்டிருக்கிறார்.

அண்ணாத்துரையாருக்கு எதிராக யார் வாய்திறந்து பேசினாலும், அவர்கள் கதி இதுதான் என்று கருணாநிதி ஆட்சி மக்களுக்கு இந்த நிகழ்ச்சி மூலம் பூச்சாண்டி காட்டுகிறது.

அண்ணாத்துரைக்கு எதிராக யாராவது வாய்திறந்து பேசினால் போலீசார் வந்துதான் அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று இல்லை. தம்பித் தம்பிரான்களே தண்டனையை நிறைவேற்றி விடுவார்கள் என்று கருணாநிதி ஆட்சி நமக்கு எச்சரிக்கை விடுக்கிறது.

ஆம், நமக்கெல்லாம் ஒரு சவாலை விடுகிறது கருணாநிதி ஆட்சி!

கட்சி வேறுபாடின்றி அண்ணாதுரையாருக்குக் கிடைத்த பெருமையை, அண்ணாத்துரையாரின் கல்லறையிலேயே அடக்கம் செய்துவிடக் கருணாநிதி ஆட்சி முடிவெடுத்துவிட்டது போல் தோன்றுகிறது!

உயிரோடு இருக்கும்போதே அவரைச் சித்திரவதை செய்து சாகடித்த கும்பல், அவர் செத்த பிறகு அவருடைய புகழைச் சித்திரவதை செய்யத் துவங்கி விட்டது.

பாவம், அண்ணாதுரையார் உயிரோடியிருக்கும் போதும் நிம்மதியாகவாழமுடியவில்லை. செத்த பிறகும் அவர் ஆன்மாவை நிம்மதியாக விடமாட்டார்கள் போலிருக்கிறது!

—கடிதம் (26—2—69)

கிருபானந்த வாரியார் வன்முறை வெறிக்கு இலக்கான நிகழ்ச்சியை அரசியல் பிரச்சினையாக்க வேண்டாம் என்று, முதலமைச்சர் வட்டாரத்திலிருந்து

அடிக்கடி குரல்கள் எழுந்த வண்ணம் உள்ளன.

இதற்கு என்ன அர்த்தம் என்று நமக்கு விளங்கவில்லை.

அரசியல் பிரச்சினை என்றால் என்ன ?

அரசியல் பிரச்சினைக்கும் மனித உணர்வுக்கும் இடையே ஒரு தொடர்பும் இல்லையா ?

அரசியல் பிரச்சினை என்பது மனிதாபிமான உணர்ச்சிக்கு அப்பாற் பட்டதா?

இந்த வினாக்களுக்கு முதலமைச்சர் சார்பினரிடமிருந்து விளக்கம் கோருகிறோம்.

சுதேசமித்திரன் ஏட்டுக்கு அளித்த ஒரு பேட்டியில் கிருபானந்த வாரியார் கூறியிருக்கும் ஒரு தகவல் நம்மைப் பதை பதைக்கச் செய்கிறது.

''என் வீட்டுக்கு வந்த 200 அல்லது 300 பேர் அடங்கிய ஒரு கூட்டத்தினர், அண்ணாத்துரை படத்தை எடுத்து வந்தார்கள். அந்தப் படத்தை வணங்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார்கள். நான் அவ்வாறே வணங்கினேன்''.

இவ்வாறு கிருபானந்த வாரியார் வேதனைப்பட்டுப் பேசியிருக்கிறார்.

ஒரு அரசியல் கட்சியின் தலைவரைக் கைகூப்பித் தொழ வேண்டும் என்று ஏறத்தாழ முன்னூறு பேர் அடங்கிய ஒரு கூட்டம் பலாத்கார பயமுறுத்தலுடன் உத்தரவிட்டிருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு காட்டு மிராண்டித்தனமான வற்புறுத்த லுக்கு இலக்கானவர் கிருபா னந்த வாரியார் என்பதைக் கூட மறந்து விடுவோம்.

மிகச் சாமானிய வழிப்போக் கன் இப்படி ஒரு பயமுறுத்த லுக்கு இலக்காகிறன் என்றே வைத்துக் கொள்வோம்.

இந்தநிலை தொடர்பாக எழும் விவகாரத்தைக் கருணுநிதியார் 'அரசியல்' என்று அழைப்பாரா? 'சமூகம்' என்று சொல்லுவாரா? அல்லது வேறு என்ன பெயரிட் டுத்தான் அழைப்பார் ?

தன்னை வழி பட வேண்டும் என்று ஹிட்லர் துப்பாக்கி முனையில் உத்தரவு பிறப்பித் திருந்தான் என்று கேள்விப்பட் டிருக்கிறேம்.

மாசே துங் கை வழி பட மறுப்பவர்களை செஞ் சீனுவில் கம்யூனிஸ்டுகள் படு கொலை செய்து வீழ்த்துகிறர்கள் என்ற செய்திகளைப் படிக்கிறேம்.

அவையெல்லாம் அரசியல் விவ காரந்தான் என்றல், அதே பாணியைப் பின்பற்றி இங்கே அண்ணவை தி. மு. க. வினர் வழிபட வைத்த நிகழ்ச்சி மட்டும் ஏன் அரசியல் ஆகக் கூடாது ?...

குண்டாந்தடி முனையில் இப் படி அண்ணுத்துரையார் படத் தை வணங்க வைத்துவிட்டதன் மூலம், அண்ணுத்துரையாருக்குப் புதுச் சிறப்பைத் தோற்றுவித்து விட்டதாக தி. மு. க. தொண் டர்கள் கருதுகிறர்களா ?.........

இந்த அக்கிரமம் எல்லாம் 'அரசியல்' பிரச்னை அல்லவென் றல் வேறு எதுதான் அரசியல் என்பதற்கு முதலமைச்சர் நமக்கு விளக்கம் தருவாரா ?.........

நெய்வேலியில் நடைபெற்ற கொடுமைகளைப்பற்றி முதல் அமைச்சர் பெரிதுபடுத்தி இது வரை தமது தம்பிகளைக் கண்டிக் கவேயில்லை.........

அதற்கு மாருக, •தம்பிகள் நடந்துகொண்டது நியாயந் தான் என்பது போன்று கருணு நிதியார் தாங்கிப் பிடித்துப் பேசி வருகிறர்.

தி. மு. க. ஏடுகளோ கிருபா னந்த வாரியார் உதைப்பட்டது நியாயம் என்று வெளிப்படை யாகவே எழுதுகின்றன.

இவற்றிற்கெல்லாம் என்ன அர்த்தம் ?

பழைய சர்வாதிகாரிகள் பாணி யில் தமது ஆட்சியை உருவாக்க கருணுநிதியார் திட்டமிட்டு விட் டாரா?

கிருபானந்தவாரியார் போன்ற வர்களை அரசியலுக்கு இழுக்க நாம் விரும்பவில்லை.

அவர் பெயரைப்பற்றி நாம் கவலைப்படவில்லை.

ஒரு தனிப்பட்ட கருத்துரி மைக்கு விடப்பட்ட சவால் நெய்வேலி நிகழ்ச்சி என்று கருதித்தான் நாம் துடிக்கிறேம்.

இது ஒரு பயங்கரமான அரசி யல் பிரச்சினை என்று தான் நாம் திட்ட வட்டமாகக் கூற எண்ணுகிறேம்.

மிகவும் விளம்பரமான, மக்க ளின் மதிப்புக்கும் மரியாதைக்கு முரிய கிருபானந்தவாரியாரே இந்தப் பாடுபட்டார் என்றல், அவருக்கு நேர்ந்த அந்த பயங் கரம் நாளை மிகச் சாமானிய மக்களையும் ஏன் பாதிக்காது என்று நாம் அச்சப்படுகிறேம்!

இந்த விவகாரம் ஒருமாபெரும் கிளர்ச்சியாக உருவெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

—கடிதம் (1—3—69)

1956' ம் வருஷத்திய ரிஜிஸ்ட்ரேஷன் ஆப் நியூஸ் பேப்பர் (சென்ட்ரல்) விதிகளில் 8'வது விதிப்படி, ''அருள்'' என்ற தமிழ் மாதப் பத்திரிகையின் உடைமையாளர் பற்றிய கீழ்க்கண்ட விவரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன :—

பாரம் 4

1.	பிரசுரிக்கப்படும் இடம் :	சென்னை
2.	பிரசுரத்தின் தன்மை :	மாதம் ஒருமுறை
3.	அச்சிடுவோர் பெயர் :	கொண்டா. காசி. சீதாராமன்.
	எத்தேசத்தவர் :	இந்தியர்.
	விலாசம் :	ராமன்ஸ் பிரிண்டிங்பிரஸ், 81-5, பாண்டி பஜார், சென்னை-17.
4.	பிரசுரகர்த்தர், ஆசிரியர் பெயர் :	கலைச்செல்வி இராம. மணிமேகலை
	எத்தேசத்தவர் :	இந்தியர்.
	விலாசம் :	4, தணிகாசலம் செட்டிதெரு, தி.நகர், சென்னை-17.
5.	இப்பத்திரிகையின் சொந்தக்காரர் பெயர், விலாசம், மொத்த முதலில் நூற்றுக்கு ஒன்றுக்கு மேல் முதல் போட்டுள்ள கூட்டாளிகள், பங்குதாரர்கள் பெயர்கள், விலாசங்கள்.	கலைச்செல்வி இராம. மணிமேகலை. (பூரண உரிமையாளர்).

மணிமேகலை என்ற நான் இதன்மூலம் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நானறிந்த மட்டில் உண்மை.

(ஒப்பம்)
இராம. மணிமேகலை
1-3-69 பிரசுரகர்த்தர்


வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

அருள்

ராமலிங்கா மிஷன்
தலைவர்
திரு.மகாலிங்கத்திற்கு
47




அருட்
பெருஞ்
ஜோதி
தனிப்
பெரும்
கருணை



15-4-69- சௌமிய - சித்திரை. விலை: 30 காசு
ஆசிரியர்: திருமதி தமிழ்வாணன்

இவ்விதழின் அட்டைப் படத்தை அலங்கரிக்கும் மாபெரும் மனிதர் நா. மகாலிங்கம் அவர்கள், ஒரு தலைசிறந்த அருள் நெறிச் செல்வர். நமது "அருள்" பத்திரிகையின் தலையாய ஆதரவாளர். சென்னை ஸ்ரீ இராமலிங்கா மிஷனின் தலைவராக இருந்து, சமயத்துறையில் அரும்பணி ஆற்றி வருபவர். ஆண்டு தோறும் அவர் தமது பிறந்தநாள் அன்று, திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கேஸ்வரரது ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்வது வழக்கம். (ஒரு சில தலைவர்களைப் போல மேனாட்டுப் பாணியில் 'கேக்' வெட்டிப் பிறந்தநாள் கொண்டாடுவது அவருடைய வழக்கம் அல்ல) அந்த முறையில், அண்மையிலே கொண்டாடப்பட்ட அவரது 47' வது பிறந்தநாள் விழாவை யொட்டி, திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் மனமுவந்து எழுதி அனுப்பியுள்ள ஒரு கட்டுரையை இங்கு மகிழ்ச்சியுடன் பிரசுரிக்கிறோம். —ஆசிரியர்.

காண்பது அரிது



திருமுருக
கிருபானந்தவாரியார்

உலகத்திலே எத்தனையோ மனிதர்கள் தோன்றுகின்றார்கள்; மறைகின்றார்கள். தோன்றியவர் எல்லாம் தோன்றியவர்கள் ஆக மாட்டார்கள்.

அப்படியானால் உண்மையில் தோன்றியவர் யார்? சொல்ல வேண்டுமோ? புகழொடு தோன்றியவரே தோன்றியவர்.

"தோன்றில் புகழொடு தோன்றுக" என்கின்றார் திருவள்ளுவர்.

மலர் என்றால் மணம் வீச வேண்டும். மணம் இல்லாத மலரால் என்ன பயன்?

அதுபோல் மனிதனிடம் புகழ் என்ற மணம் வீச வேண்டும்.

ஒரு மனிதனுக்குக் குறைந்த பட்சம் பத்து மைல் தூரம் (காத தூரம்) புகழ் மணம் வீசவேண்டும்.

ஒருவருடைய புகழ் அந்த வட்ட முழுவதும் வீசும். ஒருவருடைய புகழ் அந்த மாவட்ட முழுவதும் பரவி ஒளிவிடும்.

ஒருவருடைய புகழ் மாநில முழுவதும் வீசி நிற்கும். ஒருவருடைய புகழ் இந்தியா முழுவதும் வீசும். ஒருவருடைய புகழ் ஐந்து கண்டங்களிலும் வீசும்.

காந்தியடிகள், நேருஜி முதலிய உத்தமர்களின் புகழ் ஐந்து கண்டங்களிலும் பரவி நின்றது.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையிலே வாழ்ந்த அன்பர், திருச்சிராப்பள்ளியில் இருக்கும் நண்பரை அடிக்கடிக்குக் கடிதம் எழுதினார். சென்னைக்கு வந்தால் தன் இல்லத்தில் தங்க வேண்டும் என்பது கடிதம். திருச்சிராப்பள்ளி அன்பர் புகை வண்டி ஏறி எழும்பூரில் இறங்கினார். நண்பரது கடிதத்தை எடுத்துப் பார்த்தார்.

''சிங்கார முதலியார்,

15, சாமி நாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2''

என்று முகவரி இருந்தது. ஒரு வண்டியில் ஏறி, மேலே கண்ட முகவரிக்கு வந்தார். வண்டிக்காரனுக்குப் பணம் தந்து அனுப்பிவிட்டுத், தன் பெட்டி படுக்கையுடன் அந்த வீட்டிற்கு முன் நின்று, ''சிங்கார முதலியார்! சிங்கார முதலியார்!'' என்று அழைத்தார்.

வீட்டில் இருந்து ஒருவர் வெளியே வந்து, ''ஐயா! நீங்கள் சொல்லுகின்ற பேர் வழி இங்கு இல்லை'' யென்றார்.

திருச்சி அன்பர் திடுக்கிட்டார். ''நாம்தான் தவறாக வந்து விட்டோமோ?'' என்று எண்ணினார். திரும்பவும் அன்பர் தந்த கடிதத்தைப் பார்த்தார். முகவரி சரியாகத்தான் இருந்தது.

''ஐயா! இது என்ன தெரு''?

''சாமி நாயக்கன் தெரு.''

''இந்த வீட்டு நம்பர் என்ன?''

''பதினைந்து''

''இதோ பாருங்கள், இந்தக் கடிதத்தில் இந்த விலாசந்தான் எழுதியுளது.''

வீட்டுக்காரர், ''எதற்கும் நீங்கள் பின் கட்டில் போய்க் கேளுங்கள்'' என்றார்.

திருச்சி அன்பர், சாமான்களுடன் முன் கட்டைக் கடந்து பின்கட்டுக்குப் போகும் நடையில் நின்று,

''சிங்கார முதலியார்?'' என்று அழைத்தார். ஒருவர் ஓடி வந்தார். ''வாங்கண்ணு, வாங்கண்ணு!'' என்று அன்புடன் அழைத்துச் சென்றார்.

அவர்தான் சிங்கார முதலியார். இதனால் உங்களுக்கு என்ன விளங்குகின்றது? பின் கட்டுச் சிங்காரம் முன்கட்டுக்குத் தெரியவில்லை. பின் கட்டுக்கும் முன் கட்டுக்கும் எவ்வளவு தூரம்? முழம் சுவர்தான். சிங்காரமுதலியாருடைய புகழ் முழந்தூரங்கூடப் பரவவில்லை. அவர் வாழ்வு என்ன சிங்காரம்?

ஒரு அமாவாசை, கார்த்திகைகளில் 10 ஏழைகட்கு அன்னதானம் செய்திருந்தால், முன் கட்டுக்காரருக்குந் தெரிந்திருக்குந்தானே? நாலு மாணவர்கட்கு உபகாரச் சம்பளம் தந்திருந்தால் முன் கட்டுக்காரருக்குந் தெரிந்திருக்குந்தானே?

இத்தகைய பேர் வழிகளைப் பார்த்துத்தான் திருவள்ளுவர்,

''......அஃதிலார்

தோன்றலில் தோன்றாமை நன்று'' என்றார்.

புகழ் எதனால் வரும் ?

''உரைப்பார் உரைப்பவை யெல்லாம் வறியார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்''

''ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லதுஊதியம்இல்லைஉயிர்க்கு''

என்கின்றார் திருவள்ளுவர்.

எனவே மனிதப் பிறப்புக்கு இன்றியமையாதது புகழ். ஒவ்வொருவரும் முயன்று நல்ல கருமம் செய்து புகழைப் பெற வேண்டும்.

அறஞ் செய்து அருள் நெறியில் நிற்கும் அன்புடையவரை எல்லோரும் தமக்கு உரியவராகக் கொண்டு பேசுவார்கள். வாழ்த்துவார்கள். போற்றுவார்கள். புகழ்வார்கள்.

இந்த அரும்பெரும் இலக்கணத்துக்கு முற்றிலும் இலக்கியமாகப், புகழாகிய இமயத்தின் உச்சியில், சமரசமாகிய அரியணையில் வீற்றிருக்கும் வித்தகர் ஒருவர் உளர். அவர் யார்? அவர்தான் அறப் பெருஞ் செல்வர்

திரு N. மகாலிங்கம் அவர்கள்.

இத் திருவினரை எல்லோரும் ''என் மகாலிங்கம். என் மகாலிங்கம்'' என்று சொந்தம் பாராட்டுகின்றார்கள்.

இந்த வள்ளல் செய்திருக்கின்ற அறப்பணிகள் வரம்பில் அடங்குமா ? அடங்கா.

பொள்ளாச்சியில் அவர் அமைத்துள்ள பாலி டெக்னிக் கல்லூரியையும், அதன் எதிரில் அமைந்துள்ள அசோகத் தூணையும் காண ஒரு லட்சம் கண்கள் வேண்டுமே ?

பவளமலையில் மணி மண்டபம், பவானியில் இராஜகோபுரம், பொள்ளாச்சியில் அம்பிகை ஆலயம், இவ்வாறு எத்தனை எத்தனை அறப்பணிகள் ? எண்ணற்றவை. இந்த மாபெரும் வள்ளலிடம் நன்கொடை பெற்றவர்கள் பலர். இவரால் வாழ்ந்தவர்கள், வாழ்கின்றவர்கள் எண்ணில்லாதவர்கள்.

இவ்வள்ளலின் திருமுகத்தில் சாந்த தேவதை களிநடம் புரிகின்றது. புன்னகை தவழும் பூரணச் சந்திரனை யொத்த மலர்முகம். கருணை நிறைந்த திருவுள்ளம். கொடுத்துச் சிவந்த திருக்கரம். பொது நலத்துக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அயர்ச்சியேயில்லாத முயற்சியால் உயர்ச்சி பெற்றவர்.

இந்த உத்தம சீலருடைய புகழ் எண்ணுக்கும் எழுத்துக்கும் அடங்கமாட்டா! இளைஞர்கள் இத்தகு வித்தகசீலரைப் பார்த்து, இவரைப்போல் ஒழுக வேண்டும். இதுபோன்ற உத்தமரைக் காண்பது அரிது.

வெற்றி வேலன் திருவருளால் என். மகாலிங்கம் அவர்களுடைய முயற்சிகள் வெற்றி பெற வேண்டும். இவருடைய தொண்டு சிறக்க வேண்டும்.

நேரிசை வெண்பா.

வாழி தமிழ்ப்பண்பு
வளர்கசீர் சன்மார்க்கம்
வாழியசீர் மாநிலத்தில்
மன்னுயிர்கள்—வாழியவே
ஊழிபல வோங்கி
உயர்ந்திமயம் போலினிது
வாழிமகா லிங்கம் மகிழ்ந்து.

உ

திருச்சிற்றம்பலம்

அருட்ஜோதி தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்!
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்!
பொருட்சாரும் மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்!
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்!
இருட்பாடு நீக்கியொளி ஈந்தருளும் தெய்வம்!
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளும்தெய்வம்!
தெருட்பாட லுவந்தெனையும் சிவமாக்கும் தெய்வம்!
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்!

காயெலாங் கனியெனக் கனிவிக்கு மொருபெருங்
கருணை யமுதே! எனக்குக்
கண்கண்ட தெய்வமே! கலிகண்ட அற்புதக்
காட்சியே! கனக மலையே!
தாயெலாம் அனையவென் றந்தையே! ஒருதனித்
தலைவனே! நின்பெரு மையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
சார்கின்ற தோறும் அந்தோ
வாயெலாந் தித்திக்கும், மனமெலாந் தித்திக்கும்,
மதியெலாந் தித்திக்கும் என்
மன்னியமெய் அறிவெலாந் தித்திக்கும் எனிலதில்
வருமின்பம் என்புகலு வேன்!
தூயெலாம் பெற்றநிலை மேலருட் சுகமெலாந்
தோன்றிட விளங்கு சுடரே!
துரியவெளி நடுநின்ற பெரியபொருளே அருட்
சோதிநட ராஜ குருவே!

—திருவருட்பா

பிரம்ம ஸ்ரீ C. V. ஸ்வாமி சாஸ்திரிகள் இன்று நம் நாட்டில் உள்ள ஸ்ரீ வித்யா பண்டிதர்களுக்குள்ளே ஒரு திலகம் போல் விளங்குபவர். பரதேவதை ஸ்ரீ இராஜராஜேஸ்வரியின் திவ்ய சரித்திரமாகிய ஸ்ரீ லலிதோபாக்யானத்தை, நமது ''அருள்'' பத்திரிகையில் அவர்கள் தொடர்ச்சியாக எழுதிவர ஒப்புக் கொண்டுள்ளது, ஸ்ரீ தேவி உபாசகர்களின் பெரும்பேறு என்றே கூறவேண்டும். அன்பர்கள் படித்துப் பயன் அடைவார்களாக!

—ஆசிரியர்.

ஸ்ரீ பரதேவதையின் ப்ரபாவம்

ஸ்ரீ C. V. ஸ்வாமி சாஸ்திரிகள்

ஓம் நமோ பகவத்யை ஸ்ரீ சந்த்ரசேகரமூர்த்தயே !
ஸச்சிதானந்த ரூபிண்யை ஸ்வாத்மபோதப்ரபூர்த்தயே !!

பெரியோர்கள் **அன்பே சிவம்** என்று கூறுகிறார்கள். சிவத்தை எளிதில் அறிய முடியாது. ஆனால் அன்பை நம்மால் அறிய முடியும். அந்த அன்பு தான் ஜகன்மாதாவாகிய சித் சக்தி.

சித்சக்தியாகிய தாயின் கருணை நமக்கு ஏற்படாவிட்டால், நாம் இந்தப் பிறவிப் பெருங்கடலிலிருந்து கரையேற முடியாது. குழந்தை பிறந்தவுடன் 'அம்மா' என்று அழுகிறது. காரணம், அன்னைதான் நம்மைக் காப்பவள். நாம் தவறு செய்யும் போது, அவளே நம்மைத் திருத்தி அருள்பவள்.

அன்னையாகிய சித்சக்தியின் நிறம் சிவப்பு என்றும், தந்தையாகிய சிவத்தின் நிறம் வெண்மை என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்த சிவசக்திகளின் உணர்வு நமக்கு எளிதில் ஏற்படுவதற்காக, நமது பெரியோர்கள் பல அருமையான உத்திகளைக் கையாண்டிருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, ஆலயங்கள், மடங்கள், திருக்குளத்தின் படிக்கட்டுகள் இவற்றில் சுண்ணாம்புப் பட்டையும் காவிப்பட்டையும் மாறி மாறித் தீட்டப் பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். சுண்ணாம்புக்குச் **சுதை** என்று ஒரு பெயருண்டு. சுதை யென்றால், வடமொழியில் அமிருதம் என்று பொருள். சிவம் அமிருதஸ்வரூபமானது. அதாவது, அழிவு இல்லாதது. அந்த சிவத்தைக் குறிப்பதுதான் வெண்மையான சுண்ணாம்புப் பட்டை. அதேபோல் அம்பிகையைக் குறிப்பது காவி நிறமான செம்மண்பட்டை. இந்த அம்பிகையின் அருளால்தான், சிவப் பேறு எனப்படுகிற **மரணமிலாப் பெருவாழ்வை** நாம் அடைய முடியும்.

நாம் பூஜை செய்யும்போது, பூஜிக்கப்படுகிற தேவதையின் வலது பக்கத்தில் **வெண்மை** நிறமான திரியுடன் கூடிய நெய் விளக்கையும், இடது பக்கத்தில் **செம்மை** நிறமான திரியுடன் கூடிய நல்லெண்ணெய் விளக்கையும் ஏற்றி வைத்திருக்க வேண்டும் என்று பத்ததிகள் பகர்கின்றன.

வெண்மை நிறமான பச்சைக் கர்ப்பூரத்தையும், **செம்மை** நிறமான குங்குமப்பூவையும் அறைத்துச் சேர்த்துக் கலவை செய்யப்பட்ட சந்தனத்தையே நாம் தேவதைக்குச் சாத்த வேண்டும் என்று தந்திர சாஸ்திரங்கள் கூறுகின்றன.

விழாக்களிலும் பண்டிகைகளிலும், நம் வீதிகளில் கோலம் போடுகிறார்கள் அல்லவா? அந்தக் கோலமானது **வெண்மை** நிறமான மாவினால் வரையப்பட்டு, முடிவில் **செம்மை** நிறமான காவியினால் கரை கட்டப்படுகிறது.

இதற்கெல்லாம் உட்பொருள் என்ன?

சிவம், சக்தி இவ்விருவரது வடிவமே இந்த உலகம். சிவம் அகண்டமானது. எல்லையில்லாதது. அந்த எல்லையற்ற சிவத்தை, பிரபஞ்ச சிருஷ்டியின் பொருட்டு, (சிவம் வேறு, தான் வேறு என்று இல்லாத) சித்சக்தியே கட்டுப்படுத்தி நிற்கிறது. இந்த உண்மையை நமக்கு நினைவுறுத்துவதற்காகவே, வெண்மையும் செம்மையும் கலந்த காட்சிகளைப் பல்வேறு நிலைகளில் பரவலாக வகுத்து வைத்திருக்கிறார்கள் நம் பெரியோர்கள்.

இத்தகைய காட்சிகளை நாம் எங்கெங்கே கண்டாலும், இந்த உலகம் சிவசக்தி ஐக்கிய ரூபமானது என்னும் உணர்வை நாம் அடைய வேண்டும். அந்த உணர்வை நாம் அடைந்து விட்டால், உலகில் உள்ள எல்லாப் பொருள்களுமே நமக்கு சிவசக்திகளின் வடிவமாகத் தோன்றும். அப்போது மரத்தைப் பார்த்தவுடன் மதயானை மறைந்து விடுவதுபோல,* இந்தப் பிரபஞ்ச உணர்வும் நம்மை விட்டு அகன்று, ஜீவபோதம் ஒழிந்து சிவபோதம் மேலோங்கி விளங்கும். அதன் முதிர்ச்சியுற்ற நிலையிலே, சிவோஹம் என்ற அனுபூதி அபரோட்சமாக சித்திக்கும்.

இத்தகைய மகோன்னத நிலையை நமக்கு அருள்வதற்காக, அந்த சிவாபின்ன சித்சக்தியாகிய ஜகன்மாதாவே மானிட வேடம் தாங்கி, நமக்கு மகாவாக்கிய உபதேசம் செய்யும் உத்தம குருவாக எழுந்தருளுகிறாள். அவரால் அளிக்கப்படுகிற மூலமந்திரமாகவும், அந்த மந்திரத்தின் அதி தேவதையாகவும், அந்த தேவதைக்கு உரிய யந்திரமாகவும் அவளே விளங்குகிறாள். என்னே அந்த அன்னையின் கருணை!

இந்த அருட்சக்தி தன் பக்தர்களைக் காப்பதற்காக பல்வேறு சமயங்களில் பல்வேறு திருவுருவங்களை எடுத்துக் கொள்கிறாள் என்று புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய திருமேனிகளைத் தாங்கிய நிலையில் அவள் ஸ்ரீ லலிதாம்பிகையென்றும், இராஜராஜேஸ்வரி யென்றும், மகாத்ரிபுரசுந்தரி யென்றும், பல்வேறு திருப்பெயர்களால் வழங்கப்படுகிறாள்.

---

* 'மரத்தில் மறைந்தது மாமதயானை' என்பது திருமூலர் வாக்கு.

லக்ஷ்யத்த்வாத் ஸர்வ வித்யா நாம்

லிங்கஹீனதயா ஸ்திதே:!
தாரகத்வாத் பவாம்போதே:
லலிதேதிப்ரகீர்யதே!!

அதாவது, எல்லா வித்தைகளுக்கும் **லக்ஷ்யமாயும்**, ஆண் பெண் அலி யென்ற **லிங்க** வேறுபாடு இல்லாததாயும், பிறவிப் பெருங்கடலில் உழல்பவர்களுக்குத் **தாரகமாயும்** (அதாவது, படகுபோன்று காப்பாற்றுவதாயும்) இருப்பதால், அந்தப் பரம்பொருள் **லலிதா** * என்ற பெயரால் வழங்கப்படுகிறதாம்.

இந்தப் பூமண்டலமே ஒரு பெரிய எழுத்தோலையாகவும், கற்பகத்தருவின் கிளைகளே எழுத்தாணிகளாகவும், ஏழு சமுத்திரங்களே மைப்புட்டிகளாகவும், ஆயிரம் கைகளையுடைய விராட்புருஷனே எழுதுபவனாகவும் வாய்த்த போதிலும்;

ஸ்ரீ லலிதாம்பிகையின் கால் நகங்களால் உமிழப்படுகிற ஒளிக் கதிர்களிலே, ஒரேயொரு கதிரின் பிரபாவத்தைக் கூட எழுதி முடிக்க முடியாது என்று **ஸ்ரீலலிதோபாக்யானம்** கூறுகிறது.

ஸ்ரீ லலிதா தேவியின் வைபவங்கள் **த்ரிபுரா ரஹஸ்யம்** என்னும் கிரந்தத்திலும் மிக விரிவாகப் பேசப்படுகின்றன.

இந்த லலிதா தேவிதான் **ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியாகவும்** (அதாவது, அரசர்களுக்கெல்லாம் மேலான பேரரசியாக) விளங்குகிறாள். அவள் தான் காஞ்சிமாநகரில் கொலுவீற்றிருக்கிற அன்னை **ஸ்ரீகாமாக்ஷிதேவி**.

அந்தப் பேரரசிக்கு மந்திரிணியாக விளங்குபவள் **ஸ்ரீ ராஜ மாதங்கி**. அவள்தான் மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் அன்னை **ஸ்ரீ மீனாக்ஷிதேவி**.

ஸ்ரீ லலிதாம்பிகையின் சேனைத் தலைவியாக விளங்குபவள் **ஸ்ரீ மஹாவாராஹி**. அவள்தான் திருவானைக்காவில் கோயில் கொண்டிருக்கும் அன்னை ஸ்ரீ **அகிலாண்டேஸ்வரி**.

ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியின் காவல்படைத் § தலைவியாக விளங்குபவள் ஸ்ரீ **துர்காதேவி**. இவள் எல்லாத் திருப்பதிகளிலும் காட்சியளிப்பவள்.

நாம் ஆண்டு தோறும் புரட்டாசி மாதத்தில் கொண்டாடுகிற நவராத்ரி உற்சவம் ஸ்ரீ துர்காதேவிக்கு உரியது.

இதேபோல் லலிதாதேவிக்கும், இராஜ மாதங்கி தேவிக்கும், மஹாவாராஹி தேவிக்கும்கூட, நவராத்ரி உற்சவங்கள் உபாசகர்களால் கொண்டாடப்படுகின்றன.

ஸ்ரீ லலிதாம்பிகையின் நவராத்ரியை **வசந்த நவராத்ரி** யென்று கூறுவார்கள். இது பங்குனி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் துவங்கி நடைபெறுகிறது.

---

* வடமொழியில் **லளிதா** என்ற பிரயோகம் கிடையாது. லலிதா என்பதுதான் சரியான பெயர்.

§ காவல் படையென்பது போலீஸ் படையைப் போன்றது.

இராஜமாதங்கியின் நவராத்ரி, மாசி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் துவங்கி நடைபெறுகிறது.

மஹாவாராஹியின் நவராத்ரி, ஆடி மாதத்து அமாவாசைக்கு மறுநாள் துவங்கி நடைபெறுகிறது.

வசந்த நவராத்ரியின் போது தான் ஸ்ரீ ராமநவமியும் வருகிறது. இந்த நவமி திதியின் மத்தியான்ன வேளையில், வாயு, அக்கினி, சந்திரன், இந்திரன் முதலிய தேவர்களின் கர்வத்தை அடக்குவதற்காக, அம்பிகை ஆகாயத்தில் உமாதேவியாக தர்சனம் அளித்த செய்தி கேனோபநிஷத்தில் கூறப்படுகிறது. இவளேதான் பிரம்மஸ்வரூபிணி.

ஸ்ரீ ராமபிரானே அம்பிகையின் அவதாரம்தான். இதற்குச் சான்று இராமாயணத்திலேயே இருக்கிறது. காமாக்ஷீ விலாஸம் என்ற கிரந்தத்திலும்இருக்கிறது.

ஒரு சமயம் தசரதமகாராஜன் தன் மூன்று பத்தினிகளுடனும் காஞ்சிமாநகரை அடைந்து, மகப்பேற்றை விரும்பி ஸ்ரீகாமாக்ஷி தேவியை நோக்கிக் கடுந்தவம் இயற்றினன்.

அவனுடைய தவத்திற்கு இரங்கி, தேவி அவனது கனவில் தோன்றி, 'என்னுடைய அம்சமாக உனக்கு நான்கு குமாரர்கள் உண்டாவார்கள். நீ அயோத்தியை அடைந்து புத்திரகாமேஷ்டியைச் செய்வாயாக!' என்று கூறியருளினள்.

அதன்படியே தசரதனும் அயோத்தியை அடைந்து, புத்திர காமேஷ்டியை இனிது நிறைவேற்றினன்.

ஸ்ரீ பரதேவதை இந்திரனுக்குக் காட்சியளித்த வசந்த நவராத்ரி நவமியன்று, அதே நண்பகல் வேளையில், தசரதனுக்கு ஸ்ரீராமன் பிறந்தான்.

நான்கு ஆண்டுகளுக்குப்பிறகு, தசரதன் தன்னுடைய நான்கு குழந்தைகள், பத்தினிகள், வசிஷ்டர் முதலியோருடன் காஞ்சிபுரத்துக்கு வந்து, அம்பிகையை வழிபட்டான். அம்பிகையின் சந்நிதியிலேயே காயத்ரி மண்டபத்தில் இருக்கும் ஒரு தூணைத் தங்கத் தகட்டினல் பொதிந்தான். விலைமதிக்க முடியாத இரத்தினங்கள் பதித்த ஒரு பதக்கத்தையும் அம்பிகைக்குச் சாத்தினன். சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் அந்தப் பதக்கம் இருந்ததாக, என்னுடைய குருநாதர் * சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தத் தூணுக்கு இன்றைக்கும் தசரதஸ்தம்பம் என்றே பெயர் வழங்கி வருகிறது. மகப்பேற்றை விரும்பும் பெண்கள் அந்தத் தூணை ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள்.

ஸ்ரீ லலிதாம்பிகையின் புண்ய கதையைக் கூறுகிற லலிதோபாக்யானத்தை, ''அருள்'' பத்திரிகையில் சுருக்கமாக வெளியிட்டு வரலாமென்று எண்ணம் கொண்டுள்ளேன். இறைவி அருள் புரிவாளாக!

---

* இவர் பெயர் ஸ்ரீ சிதானந்தநாதர். ஸ்ரீ குஹானந்தமண்டலியென்னும் ஸ்ரீவித்யாமண்டலியை நிறுவிய மகா புருஷர் இவரே.

நமது கலாச்சாரம்

கலைச்செல்வி இராம. மணிமேகலை

3. நாஸ்திகர்களும் கடவுள்வழிபாடு உடையவர்களே !

இறைவன் எங்கும் இருக்கிறார் என்பது, எல்லா மதங்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஓர் உண்மை. தெய்வமே இல்லை யென்று சொல்லுகிற சமண பௌத்த சமயங்கள்கூட, தாய் தந்தையரையும் குருவையும் **தெய்வமாகக்** கருத வேண்டும் என வலியுறுத்துகின்றன. எனவே, நாஸ்திக மதங்களுக்கும் ஆஸ்திக மதங்களுக்கும் உள்ள கருத்து வேறுபாடு, தெய்வத்தின் **இலக்கணத்தைப்** பற்றியது தானே தவிர, தெய்வம் என்ற **கொள்கையைப்** பற்றியது அல்ல.

ஆஸ்திக மதங்களுக்குள்ளேயே, தெய்வத்தின் இலக்கணத்தைப் பற்றிய தகராறுகள் ஏராளமாக ருக்கின்றன. எடுத்துக் காட்டாக, இறைவன் எப்படிப்பட்டவன் என்பதைப்பற்றி ஆதிசங்கரருடைய அத்வைதமும், மத்வருடைய துவைதமும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இலக்கணங்களைக் கூறுகின்றன. சைவ சமயிகளுக்குள்ளேயே சித்தாந்த சைவர்களும் வீர சைவர்களும் சிவனுடைய இயல்புகளைப்பற்றி ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துக்களைப் பேசுகின்றனர். ஆஸ்திக மதங்களுக்குள்ளேயே இவ்வளவு வேறுபாடுகள் இருக்கும்போது, ஆஸ்திகத்துக்கும் நாஸ்திகத்துக்கும் இடையே இறைவனுடைய இலக்கணங்களைப்பற்றிக் கருத்து வேற்றுமை இல்லாமலா இருக்கும்?

இறைவனுக்கு ஆஸ்திகர்கள் கூறுகிற சில இலக்கணங்களை நாஸ்திகர்கள் ஒப்புக்கொள்ளாததை வைத்துக்கொண்டு, 'அவர்கள் இறைவனையே இல்லை யென்று சொல்லிவிட்டார்கள்' என எண்ணிவிடக் கூடாது. அவர்களும் இறைவன் என்ற **கொள்கையை** ஒப்புக் கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சமணர்கள் தங்கள் சமய முதல்வராகிய விருஷப தேவரை '**அருகக் கடவுள்**' என்றே குறிப்பிடுகிறார்கள். பௌத்தர்களும் தங்கள் சமய முதல்வராகிய போதிஸத்வரை 'புத்த **பகவான்**' என்றுதான் வழங்குகிறார்கள்.

அதாவது, பகவான் என்னும் சொல்லுக்கு எந்த அடிப்படையில் சைவர்கள் சிவனேயும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவையும் பொருளாகக் கொள்கிறார்களோ;

அதே அடிப்படையில்தான் பகவான் என்னும் சொல்லுக்குச் சமணர்கள் ஜினன் எனப்படுகிற விருஷப தேவரையும், புத்தன்

எனப்படுகிற கௌதமரையும் பொருளாகக் கொள்கிறார்கள்.*

அப்படியானால் அந்த அடிப்படை யாது?

ஆஸ்திகர்களுக்கும் நாஸ்திகர்களுக்கும் ஒருபாலம் போல் விளங்கியவர் ஆதிசங்கரர்.'' இவ்வுலகியலில் நாம் ஈடுபட்டிருக்கும் வரையில், நமக்குத் தலைவனாகிய ஓர் இறைவன் உண்டு. இவ்வுலகியலிலிருந்து விடுபட்டு நாம் ஜீவன்முக்தி நிலையை எய்தி விட்டோமானால், அப்புறம் நமக்கு வேறாக ஒரு கடவுள் கிடையாது!'' இதுவே ஆதிசங்கரரின் அத்வைத சித்தாந்தம். இந்த சித்தாந்தம்தான் உபநிஷத்துக்களிலும் வலியுறுத்தப்படுகிறது.

அதாவது, ''உலகம் என ஒன்று இருக்கிறது. அதில் கோடானு கோடி உயிர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. அந்த உயிர்களில் நானும் ஒருவன்'' என்னும் உணர்வு நமக்கு இருக்கும்வரையில், நாம் ஏதேனும் ஒரு வடிவத்தில் கடவுளை வழிபட்டே ஆக வேண்டும். இந்த அடிப்படையில் தான், ஜினதேவர் என்ற வடிவத்தில் ஜைனர்களும், புத்தர் என்ற வடிவத்தில் பௌத்தர்களும், கடவுளை வழிபட்டு வருகிறார்கள்.

இந்த முறையில் பார்க்கும் போது, காரல் மார்க்சும் இங்கர்சாலும் போதித்த மேலை நாட்டு நாஸ்திகத்திற்கும், சமணர்களும் பௌத்தர்களும் கடைப்பிடித்து வருகிற நம் பாரத நாட்டு நாஸ்திகத்திற்கும் இடையே, மடுவுக்கும் மலைக்கும் உள்ள வேறுபாடு இருப்பது தெளிவாகத் தெரிய வரும்.

மேலை நாட்டு நாஸ்திகர்களுக்குக் கடவுள் வழி பாடே தேவையில்லை. நம் நாட்டு நாஸ்திகர்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் கடவுள் வழிபாடு இன்றியமையாததாய் இருக்கிறது. சங்க காலம் தொட்டு, இந்த நாட்டில் சமண மடங்களும் பௌத்த மடங்களும் மட்டும் அல்லாது, சமண ஆலயங்களும் பௌத்த ஆலயங்களும் இருந்து வருவதே இதற்குச் சான்று ஆகும்.

எனவே, எவ்வகையிலேனும், எந்த வடிவத்திலேனும், இறைவனை மக்கள் வழிபட வேண்டும் என்பது, நம் பாரத நாட்டின் பழமையான கலாச்சாரம் என்று தெரிகிறது அல்லவா?

இந்தக் கலாச்சாரம் தான் தொன்று தொட்டு நம்முடைய குடும்ப வாழ்க்கைக்கே அடிப்படையாக விளங்கி வந்திருக்கிறது.

---

* இப்படி நான் சொல்லவில்லை. சூடாமணி நிகண்டை இயற்றிய மண்டல புருடன் என்னும் சமணப் பெரியார் சொல்லுகிறார்.

''பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்'' என்பது அவரது திருவாக்கு. இதிலே ஈசன் என்பது சிவன். மாயோன் என்பது விஷ்ணு. பங்கயன் என்பது. பிரம்மா. சினன் என்பது ஜினன். ஜினனை வழிபடுவதாலேயே சமணர்கள் ஜைனர்கள் என அழைக்கப்படுகிறார்கள். புத்தனை வழிபடுவோர் பௌத்தர்கள்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது, நமது மூதாட்டியார் அருளிய முதுமொழி.

"மாத்ரு தேவோ பவ! பித்ரு தேவோ பவ!" என்னும் வேத வாக்கியங்களின் மொழி பெயர்ப்பே இது.

"அன்னையையும் தந்தையையும் எதற்காக தெய்வங்களாக வணங்க வேண்டும்? அவர்களும் நம்மைப்போன்ற மனிதர்கள் தாமே? அவர்கள் உண்மையிலே கடவுளர்கள் அல்லவே? கடவுளர் அல்லாதோரைக் கடவுளராகக் கற்பனை செய்வது, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகாதா? அது நம் பகுத்தறிவுக்குப் பொருத்தமாக இல்லையே?" என்ற கேள்வியை எழுப்புவான் இந்தக் காலத்துப் பிள்ளை.

உண்மைதான், அப்பா. கடவுளை எப்படியேனும் வழிபடுவது தான் இந்த நாட்டின் கலாச்சாரம் என்பதை நீ ஒப்புக் கொள்வாயானால்;

அந்தக் கலாச்சாரத்திலே ஊறிப் பிறந்திருக்கிற காரணத்தால், உன்னையும் அறியாமலே நீ கடவுளை வழிபட வேண்டும் என்று ஆசைப்படுவாயானால்;

அந்தக் கடவுளை நீ எங்கே போய்க் கண்டு, எப்படி வழி படுவாய்?

கடவுள் எங்கும் இருக்கிறார் என்று எல்லாச் சமயத்தவரும் தான் சொல்லுகிறார்கள். ஆனால், அவரை எங்கும் காண்பதற்கு எல்லோராலும் முடிகிறதா? முதலில் உன்னால் முடியுமா?

காணப்படுகிற பொருள்கள் அனைத்தையும் கடவுள் வடிவமாகவே காண்பது, மிகப் பெரிய ஞானிகளுக்கு மட்டுமே கை வந்த ஒரு கலையாகும். நம் போன்றவர்களால் அதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

அதனால்தான் நம் போன்றவர்கள் கடவுளைக் காண்பதற்காகக் கோயில்களுக்குப் போகிறோம்.

ஆனால், கோயிலிலும் நாம் என்ன கடவுளையா கண் எதிரே கண்டு விடுகிறோம்? கல்லினாலும் செம்பினாலும் வடிக்கப்பட்ட விக்கிரகங்களைத்தானே நாம் அங்கு காண்கிறோம்?

எனினும், அந்த விக்கிரகங்களைக் கல் என்றும் செம்பு என்றும் கருதிவிடாமல், அவற்றைக் கடவுளர்களாகக் காண வேண்டும் என்பது விதி.

அந்த விதியைக் கடைப் பிடிப்பது மட்டும் எளிதான காரியமா, என்ன?

"இது கல்" என்று நம்முடைய கண்கள் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே;

"அல்ல, அல்ல! இது கடவுள்!" என்று நம் உள்ளம் உரத்த குரலில் அடித்துச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்வதற்கான ஆற்றல் நம் உள்ளத்திற்கு ஏற்பட வேண்டுமானால், அதற்கு எவ்வளவு கால மனப்பயிற்சியை நாம் பெற்றிருக்க வேண்டும்?

அந்த மனப் பயிற்சியின் முதற்படிதான் தாயையும் தந்தையும் தெய்வங்களாக வழிபடுவது!

ஏனென்றால், ஒரு மகனைப் பொறுத்த மட்டில், அவனைப் பெற்ற தாய் தந்தையர்க்கும் கடவுளுக்கும் இடையே மிக நெருங்கிய குண ஒற்றுமைகள் இருக்கின்றன. அவை யாவை என்பதை அடுத்த இதழில் ஆராய்வோம்.

—தொடரும்

உ

திருச்சிற்றம்பலம்

மருந்தறியேன் மணியறியேன் மந்திரமொன்றறியேன்
மதியறியேன் விதியறியேன் வாழ்க்கைநிலை யறியேன்
திருந்தறியேன் திருவருளின் செயலறியேன் அறந்தான்
செய்தறியேன் மனமடங்கும் திறத்தினிலோ ரிடத்தே
இருந்தறியேன் அறிந்தோரை ஏத்திடவு மறியேன்
எந்தைபிரான் மணிமன்றம் எய்தஅறி வேனோ?
இருந்ததிசை சொலவறியேன் எங்ஙனம்நான் புகுவேன்
யார்க்குரைப்பே னென்னசெய்வே னேதுமறிந் திலனே!

தீது நினைக்கும் பாவிகட்கும் செய்தாய்
கருணை யெனத்தெளிந்து,
வாது நினைக்கும் மனக்கடையேன் மகிழ்வுற்
றிருந்தேன் என்னளவில்
சூது நினைப்பா யெனில்யார்க்குச் சொல்வேன்
யாரைத் துணைக்கொள்வேன்
ஏது நினைப்பேன் ஐயோ நான் பாவி
யுடம்பேன் எடுத்தேனே!

—திருவருட்பா



மனக்கலக்கமே யோகத்தின் முதல்படி

தமிழ்வாணன்

நம் பாரத நாட்டின் தலைசிறந்த இதிகாசங்கள் இராமாயணமும் பாரதமும் ஆகும். இரண்டும் முதல் முதலாக வடமொழியில் தான் இயற்றப்பட்டன. இராமாயணத்தை இயற்றியவர் வால்மீகி முனிவர். பாரதத்தை இயற்றியவர் வியாச முனிவர்.

இவ்விரண்டினுள்ளே பாரதம் தான் அளவில் பெரியது. அதாவது இராமாயணத்தைப்போல் நான்கு மடங்கு பெரியது. மொத்தம் நூறாயிரம் செய்யுட்களைக் கொண்டது. இதன் பெருமையை நோக்கித்தான் இதனை மகாபாரதம் என்று சிறப்பிக்கிறார்கள்.

மகாபாரதத்தில் எண்ணற்ற கதைகளும் துணைக்கதைகளும் வருகின்றன. வாழ்க்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்ன என்ன வகையான பிரசினைகள் எழக்கூடும், அவற்றையெல்லாம் அவர்கள் எப்படி எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதை விளக்கிக் கூறி வழிகாட்டும் முறையில் அந்தக் கதைகள் அமைந்துள்ளன. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அறத்துக்கும் மறத்துக்கும் இடையே நிகழும் மாபெரும் போராட்டத்தை விவரிப்பதே மகாபாரத இதிகாசத்தின் தலையாய குறிக்கோள்.

இப்பொழுது

வெற்றிகரமாக நடைபெறுகிறது !



அறம் அல்லது நீதியின் சார்பாக நிற்பவர்கள் பஞ்சபாண்டவர்கள். மறம் அல்லது அநீதியின் சார்பாக நிற்பவர்கள் துரியோதனனும் அவனுடைய தம்பிமார்களும் ஆகிய கௌரவர்கள். இந்த இருதரப்பினருக்கும் போர் மூண்டு விடுகிறது. அந்தப் போரானது பதினெட்டு நாட்கள் நடைபெறுகிறது. இறுதி வெற்றி பாண்டவர்களுக்குத்தான் என்றாலும், அந்தக் காலத்தில் இந்தப் பாரத நாட்டில் வாழ்ந்திருந்த க்ஷத்திரியர்கள் எனப்படும் வீர மரபினரில் பெரும்பாலோர் அதில் மடிந்து ஒழிந்துவிட்டார்கள்.

போர் நடந்த இடத்திற்குக் குரு க்ஷேத்திரம் என்று பெயர். பிற்காலத்தில்கூட, நம் பாரத நாட்டின் தலைவிதியைத் தீர்மானித்த பல பெரும் போர்கள் அந்த இடத்தில் நடந்துள்ளன. போர்க்களத்தின் மேற்குப் பகுதியில், பாண்டவரின் படைகள் கிழக்கு நோக்கியவாறு அணிவகுத்து நின்றன. கிழக்குப் பகுதியில், துரியோதனனின் படைகள் மேற்கு நோக்கியவாறு அணிவகுத்து நின்றன.

அறம் விளங்கும் இடத்தில் இறைவனும் விளங்குவது இயல்புதானே! அந்த அடிப்படையின் படி, கால் நிலம் தோய மனித வடிவில் நடமாடித் திரிந்த கடவுளாகிய கண்ணபிரான், பாண்டவர்களின் பங்கிலே வந்து தங்கியிருந்தார். அதுமட்டுமல்ல, அர்ச்சுனனுக்குப் போர்க்களத்திலே தேரோட்டியாகவும் அவர் பணி புரிந்தார். இறைவன் தன் அடியார்களின் அன்புக்கு அடிமையாகிவிடுபவன் என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

அந்தக் காலத்தில் உலகிலுள்ள வில்லாளிகள் எல்லாம் தலை வணங்கும் தகுதியுடையவனாய் விளங்கியவன் அர்ச்சுனன். அவன் வேட வடிவத்தில் வந்த பரமசிவனோடு மற்போர் புரிந்து அவரைத் தன் வில்லால் அடித்து மண்டையைப் பிளந்தவன். எத்தனையோ அசுரர்களையும் கந்தர்வர்களையும் போரில் புறமுதுகு கண்டவன். கண்கண்ட கடவுளாகிய கண்ணபிரானைத் தன் தோழனாகவும் துணைவனாகவும் பெற்றவன். அப்படிப்பட்ட அர்ச்சுனனுக்கு, திடீரென்று ஒரு மனக்குழப்பம் ஏற்பட்டது.

அன்றைக்குத்தான் போர் தொடங்கப் போகிறது. இரு தரப்புப் படைகளும் நேருக்கு நேர் அணிவகுத்து நிற்கின்றன. அந்த இரண்டு அணிகளுக்கும் நடுவே தன் தேரைக் கொண்டு போய் நிறுத்துமாறு கண்ணபிரானுக்குக் கட்டளையிடுகிறான் அர்ச்சுனன்.

கண்ணபிரான் அவ்வாறே கொண்டு போய் நிறுத்துகிறார். அர்ச்சுனன் தன் தேரிலிருந்த படியே, தன்னோடு போர் புரியப் போகும் வீரர்களைப் பார்வையிடுகிறான். அந்த வீரர்களிடையே தன்னுடைய குல முதல்வராகிய பீஷ்மர், ஆசிரியராகிய துரோணர், இன்னும் இவர்களைப் போன்ற மதிப்புக்கு உரிய பெரியவர்கள், அன்புக்கு உரிய நண்பர்கள் ஆகியோரைக் காணுகிறான். ''இவர்கள் இத்தனை பேரையும் கொன்றுவிட்டு, இந்தப் பேரரசை நாம் அடைய வேண்டுமா? அதைவிடப் பிச்சை எடுப்பதே மேல்அல்லவா?'' என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் ஏற்படுகிறது. உடனே அவன் தன் வில்லையும் அம்புகளையும் கீழே வைத்துவிட்டு, ''கண்ணா! நான் போர்

புரிய மாட்டேன்!'' என்று கூறி விடுகிருன். அப்போது அவனது மனக்குழப்பத்தை மாற்றி அவனுக்குத் தெளிவுண்டாக்கும் பொருட்டுக் கண்ணனுல் மொழியப்பட்ட அறிவுரைதான் பகவத் கீதை.

கீதையென்றுல், பாட்டு எனப் பொருள்படும். பகவானுல் அருளிச் செய்யப்பட்டதாகையால், அதற்குப் பகவத்கீதை எனப் பெயர் வந்தது.

மகாபாரதத்தின் ஒரு பகுதியாக விளங்குவது பகவத்கீதை. தன் பகைவர்களேக் கொன்று பழிதீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு எப்போது வரும் என்று பதின் மூன்று ஆண்டுகளாகக் காத்துக் கிடந்தவன் அர்ச்சுனன். அவன் ஆவலோடு எதிர்நோக்கியிருந்த அந்த வாய்ப்பு இப்போது வந்து விட்டது. இனி அவன் செய்ய வேண்டுவதெல்லாம் தன்காண்டீபத்தை வளேத்துக் கணேகளேத் தொடுத்துப் பகைவர்களேக் கொன்றுகுவிப்பதைத் தவிரவேறு ஒன்றுமே இல்லே. அதைச் செய்யாமல் அவன் இப்போது காண்டீபத்தைக் கீழே போட்டு விட்டுக் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டான். இதற்குக் காரணம் என்ன?

காரணம் வேறுஒன்றும் இல்லே. வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும் தினமும் செய்து கொண்டிருக்கும் தவறைத்தான் அர்ச்சுனனும் செய்தான். அதாவது, பிரசினேயை அணுக வேண்டிய முறையை விட்டுத் தவருன முறையில் அணுகினுன். அந்தத் தவறை எடுத்துக் கூறி, அவனுக்குச் சரியான வழியைக் காட்டிஞர் கண்ணபிரான். அதன் பிறகே அவனுக்கு மனக்கலக்கம் நீங்கி, அறிவில் தெளிவு பிறந்தது. உடனே அவன் ஆர்வத்தோடு போரில் குதித்தான்,

கண்ணன் காட்டிய அந்த வழியானது அர்ச்சுனனுக்கு மட்டுமே பொருத்தமானதாய் இருக்குமாயின், பகவத்கீதையை யாரும் படிக்க வேண்டிய நிலே ஏற்பட்டிருக்காது. ஆனுல், கடந்த நாற்பது அல்லது ஐம்பது நூற்றுண்டுகளாக இந்தநாட்டிலுள்ள அறிவுடைப் பெருமக்கள் அனேவரும் அதை விரும்பிப் படித்து வந்திருக்கிருர்கள். சென்ற இரு நூறு ஆண்டுகளாக, அதை மேலே நாட்டினரும்கூட ஆர்வத்தோடு படித்து வருகிருர்கள். ஏனென்றுல், உலகில் உள்ள எல்லா நாடுகளேயும் எல்லாக் காலங்களேயும் சேர்ந்த எல்லா மக்களுக்கும், அவர்கள் ஆணுயிருந்தாலும் சரி, பெண்ணுயிருந்தாலும் சரி, ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏற்படக் கூடிய சிறிய அல்லது பெரிய பிரசினேகள் அனேத்தையும் அவர்கள் எப்படி அணுக வேண்டும் என்ற நெறிமுறைகளே விளக்கிக் கூறுகிறது பகவத்கீதை.

ஒரு பிரசினேயைத் தீர்த்துக் கொள்ளும் இரகசியம், அதை நாம் அணுகும் முறையிலேயே அடங்கி இருக்கிறது என்கின்றனர் இன்றைய மனவியல் விஞ்ஞானிகள். இந்த இரகசியத்தைப் பலப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னமேயே நம் முன்னேர்கள் அறிந்திருந்தனர் என்பதற்குப் பகவத்கீதை ஒரு சான்ருக விளங் கிறது. உலகம் இன்பமயமானதா துன்ப மயமானதா

என்பது, அதை நாம் நோக்கும் பான்மையிலேயே அடங்கி இருக்கிறது. பொதுவாகத் துன்பமயமானது எனத் தூற்றப்படுகிற உலகத்தை மனிதன் இன்பமயமாக மாற்றிக்கொள்ள வேண்டுமானால், அந்த உலகத்தையும் அதன் நிகழ்ச்சிகளையும் அவன் எப்படி நோக்க வேண்டும் என்ற இரகசியத்தை, பகவத் கீதை தெளிவாக விரித்துரைக்கிறது. இத்துறையில் இதற்கு நிகரான இன்னொரு நூல் உலகத்திலேயே இல்லை என்று சொன்னால், அது அவ்வளவாக மிகையாகிவிடாது.

உலகில் இன்பமாக வாழ்வது என்றால் என்ன? வெறும் களிப்பும் களியாட்டங்களும் நிறைந்த வாழ்க்கை, இன்ப வாழ்க்கை ஆகிவிடமாட்டாது. அதை ஒரு கொந்தளிப்பான வாழ்க்கையென்று கூறுவதே பொருத்தமாயிருக்கும். கொந்தளிப்பு என்பது, மனத்தில் துன்ப உணர்ச்சிகளாலும் ஏற்படலாம்; இன்ப உணர்ச்சிகளாலும் ஏற்படலாம். இவ்விருவகை உணர்ச்சிகளாலும் தாக்குறாத அமைதியான உள்ளம் தான், உண்மையான ஆனந்தத்தின் நிலைக்களனாக விளங்க முடியும்.

அந்த அமைதியிலும் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று,

மூடத்தனமான அமைதி; மற்றொன்று அறிவோடு கூடிய அமைதி. மூடத்தனமான அமைதி மண்டித் தண்ணீரைப் போன்றது; அறிவோடு கூடிய அமைதி தெளிந்த நீரைப் போன்றது. மூடத்தனமான அமைதியானது, ஆனந்தத்தைத் தோற்றுவிக்காது. அறிவில் தெளிவோடுகூடிய அமைதியே அதைத் தோற்றுவிக்கும். ஆனால் மூடத்தனமான உள்ளத்தில் தெளிவை உண்டாக்குவது எப்படி?

மண்டித் தண்ணீரை நாம் எப்படித் தெளிவான தண்ணீராக மாற்றுகிறோம்? தேற்றாங் கொட்டையை அறைத்துக் கரைத்தால் மண்டித் தண்ணீரில் ஒரு கலங்கல் உண்டாகி விடுகிறது; அப்புறம் சிறிது நேரத்திற்கெல்லாம் தானாகவே அந்தக் கலங்கல் அடங்கித் தண்ணீர் தெளிந்து விடுகிறது.

இதே போல, மூடத்தனமான உள்ளத்தில் தெளிவு உண்டாக வேண்டுமானால், முதலில் அங்கு ஒரு கலக்கம் ஏற்பட வேண்டும். அர்ச்சுனனுக்கு அத்தகைய ஒரு கலக்கம் வந்தது. அந்தக் கலக்கத்தின் விளைவாகவே கீதை பிறந்தது. கீதையினால் அவன் அறிவு தெளிந்தது. தெளிந்த அறிவில் தான் சமத்துவம் எனப்படுகிற யோகநிலை கைகூட முடியும். அந்த யோக நிலை கைகூடுவதற்கான ஓர் இன்றியமையாத காரணமாய் விளங்கியது, அவனுடைய மனக்கலக்கமே.


ஆகையால், இந்த மனக்கலக்கத்தையும் ஒரு யோகமாகக் கூறுகிறார்கள் பெரியவர்கள். கீதையின் முதலாவது அத்தியாயத்தில் அர்ச்சுனனுடைய மனக்கலக்கம் விவரிக்கப்பட்டிருக்கிறது. எனவே அந்த அத்தியாயத்துக்கு ''அர்ச்சுன விஷாத யோகம்'' என்று பெயரிட்டிருக்கிறார்கள். விஷாதம் என்றால் மனக்கலக்கம்.

அர்ச்சுனனுக்கு மட்டும் அல்ல, உலகிலுள்ள ஆண்கள் பெண்கள் அனைவருக்குமே பொருந்தக் கூடிய ஓர் அரிய உண்மை இது. நம்மில் எவருக்காவது, எப்போதாவது, எக்காரணத்தை முன்னிட்டாவது ஒரு மனக்கலக்கம் ஏற்படுமானால், அது உண்மையில் நமது நன்மைக்கே வந்திருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். மனக்கலக்கத்துக்கு ஆளாகாத மனிதர்கள் உலகில் எவருமே கிடையாது. ஆனால் அந்தக் கலக்கத்தைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்பவர்கள் மிக மிக அரிதாகக் காணப்படுகிறார்கள். அப்படிப் பயன்படுத்திக்கொண்டால், அதுவே யோக நெறியில் நாம் அடியெடுத்து வைக்கும் முதல் படியாக அமைந்துவிடும். ○

நீ பொறுமையிழந்து கோபிப்பதேனோ? உன்னிடமும் சரி, என்னிடமும் சரி, மற்ற விடங்களிலும் சரி, ஒரே ஆண்டவனன்றோ சர்வ வியாபியாக விளங்குகிறான்? ஆகவே, பேதத்தைத் தோற்றுவிக்கும் அஞ்ஞானத்தை விட்டு, எப்பொருளிலும் உன் சொரூபத்தையே காண். இறுதியில், நான், நீ என்ற யாவும் கரைந்து, உள்ளது பிரமம் ஒன்றே என உணர்வாய்.

— ஆதிசங்கரர்

''வேதவேதாந்த வித்வரத்னம்'' ''இதாம்ருதவர்ஷி'' யென்னும் பெறற்கரிய விருதுகளைப் பெற்றுள்ள பிரம்ம ஸ்ரீ ஆர். முத்துக்கிருஷ்ணசாஸ்திரிகள், வேதம், வேதாந்தம், நீதி, தர்மம், பக்தி, சகுனம் இப்படிப் பல துறைகளைச் சேர்ந்த அபூர்வமான ஸம்ஸ்கிருத நூல்களை, தமிழில் உரையுடன் வெளியிட்டுள்ளார்கள்,* வருகிற மே மாதம் 5'ம் நாளன்று, அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ இருக்கிறது. இன்னும் பல அறுபது ஆண்டுகள் அவர் இந்நிலவுலகில் இனிதே வாழுமாறு, இறைவன் அருள்புரிவானாக! — ஆசிரியர்.



நச்சுப் பொய்கை

ஸ்ரீ ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

கேள்வி: மனிதனுடைய ஆத்மா எனக் கூறக் கூடியவன் எவன்?

பதில்: மகன்.

கேள்வி: தெய்வத்தால் அளிக்கப்பட்ட துணை யார்?

பதில்: மனைவி,

கேள்வி: மனித வாழ்விற்கு ஸாதனம் எது?

பதில்: மழை.

---

* *இந்நூல்களைப் பற்றிய விவரங்களை, ''ஹிதபாஷிணி பப்ளிகேஷன்ஸ், 1835/3, மேற்கு மெயின் தெரு, தஞ்சாவூர்''* என்னும் விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி : மனிதனுல் முக்கியமாக எப்பொழுதும் பின்பற்றப் பட வேண்டியது எது ?

பதில் : தானம்.

(விடாமுயற்சி, உண்மை பேசுதல், நல்லொழுக்கம், தானம் இவற்றைப் பின்பற்ற வேண்டும். அவற்றுள் தானமே பிள்ளைபோல் ஆத்மா என்றும், மனைவி போல் உற்ற துணைவன் என்றும், மழைபோல் வாழ்விற்கு சாதனமென்றும் கருதப்படுகின்றபடியால், அதை அவசியம் செய்யவேண்டுமென்று கூறப் பட்டது.)

கேள்வி ; தனத்தைச் சம்பாதிப்பதற்குப் பல சாதனங்களுள் சிறந்தது யாது ?

பதில் : விடா முயற்சி.

கேள்வி : பொருள்களுள் சிறந்தது யாது ?

பதில் : அறிஞர்களிடமிருந்து சாஸ்திரங்களின் கருத்தைக் கேட்டு அறிதல்.

கேள்வி : இலாபங்களுள் உயர்ந்தது எது ?

பதில் : ஆரோக்கியம்.

கேள்வி : சுகங்களுள் சிறந்தது யாது ?

பதில் : திருப்தியுடன் இருத்தல்.

கேள்வி : சிறந்த தர்மம் எது ?

பதில் : யாருக்கும் பயத்தை உண்டுபண்ணுமல், அனைவரிடமும் தயையுடனிருத்தல்.

கேள்வி : எந்த தர்மம் அழிவற்ற பயனை அளிக்கக் கூடியது ?

பதில் : வேதத்தில் உரைக்கப்பட்ட தர்மம்.

கேள்வி : எதை அடக்கிஞல் துன்பத்தை அடையாமலிருக்கலாம் ?

பதில் : மனத்தை அடக்கிஞல் துன்பத்தை யடையாமல் இருக்கலாம்.

கேள்வி : யாருடைய சிநேகம் பயனுள்ளது.

பதில் : சாதுக்களுடைய சிநேகம் பயனுள்ளது.

கேள்வி : எதை விட்டால் அனைவருக்கும் வேண்டியவனுக இருக்கலாம் ?

பதில் : கர்வத்தை விட்டால் அனைவருக்கும் வேண்டியவனுக இருக்கலாம்.

கேள்வி : எதை விட்டால் வருந்தாமலிருக்கலாம்.

பதில் : கோபத்தை விட்டால் வருந்தாமலிருக்கலாம்?

கேள்வி ; எதை விட்டால் பணக்காரனுக ஆகலாம்?

பதில் : காமத்தை விட்டால் பணக்காரனுக ஆகலாம்.

கேள்வி : எதை ஒழித்தால் சுகத்தையடையலாம் ?

பதில் : லோபத்தை ஒழித்தால் சுகத்தை யடையலாம்.

[காமம்—பொருள் இன்னும் வேண்டும் என்ற ஆசை. லோபம்—கிடைத்த பொருளை எக்காரணம் பற்றியும் செலவு செய்ய மனமில்லாமை.]

கேள்வி : பிராம்மணனுக்கு தானம் செய்தால், அதனுல் உண்டாகும் பயன் யாது ?
பதில் : தர்மம்.

கேள்வி : நடிகர்களுக்குச் செய்யப்படும் தானத்திற்குப் பயன் என்ன ?

பதில்: புகழ்.

கேள்வி : சேவகர்களுக்குத் தானம் செய்வது எதற்காக ?

பதில் : அவர்களை இரக்ஷிப்பதற்காக.

கேள்வி : அரசர்களுக்கு தானம் செய்வது (வரி கொடுப்பது) எதற்காக ?

பதில் : வரி கொடுக்காவிட்டால் தண்டிப்பார்களே என்ற பயத்தால் கொடுக்கப்படுவதால், அந்த தானம் பயமில்லாமல் இருப்பதற்கென்று ஏற்படுகிறது.

கேள்வி : ஆத்மஸ்வரூபம் எதனுல் மறைக்கப்பட்டிருக்கிறது ?

பதில் : அஞ்ஞானத்தாலும், அதனுல் தோன்றும் பிரபஞ்சத்தாலும் மறைக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி : சுஷுப்தி காலத்தில் ஆத்மா ஏன் பிரகாசிப்பதில்லை ?

பதில் : அப்பொழுது அஞ்ஞான காரியமாகிய பிரபஞ்சம் தோன்ருவிட்டாலும், அஞ்ஞானம் அழியாமலே இருக்கின்றபடியால் ஆத்மஸ்வரூபம் பிரகாசிப்பதில்லை ?

கேள்வி : ஒருவன் தன் சினேகிதர்களை எதனுல் இழக்கின்ருன் ?

பதில் : பேராசையால்.

கேள்வி : ஏன் ஒருவன் சுவர்க்கத்தை அடைய முடியாதவனுக இருக்கிருன் ?

பதில் : விஷய சுகத்தில் உள்ள பற்றுதலால்.

[அஞ்ஞானத்தால் ஆத்மஸ்வரூபம் பிரகாசிக்கவில்லை. ஆதலால் அஞ்ஞானம் விலக ஞானத்தை சம்பாதிக்க வேண்டும். லோபத்தையும் (பேராசையையும்) ஸங்கத்தையும் ஒழித்தால்தான் ஞானம் உண்டாகும்.]

கேள்வி : எந்த மனிதன் இறந்தவனுகக் கருதப்படுவான் ?

பதில் : பணமிருந்தும் அவசியம் செலவு செய்யவேண்டிய காரியங்களுக்குக்கூடச் செலவு செய்யாமல் இரக்ஷித்து வருகின்றவனே இறந்தவனுகக் கருதப்படுவான்.

கேள்வி : எந்த இராஜ்யம் அழிந்ததாகக் கருதப்படும் ?

பதில் : அரசன் இல்லாத ராஜ்யம் அழிந்ததாகக் கருதப்படும்.

கேள்வி: எந்த சிராத்தம் நஷ்டமெனக் கருதப்படும் ?

பதில் : அத்யயனம் செய்த பிராம்மணன் இல்லாத சிராத்தம்.

(எந்த சிராத்தத்தில் அத்தியயனம் செய்தவன் வரிக்கப்படவில்லையோ, அந்த சிராத்தம் நஷ்டமாம்.)

கேள்வி : எந்த யாகம் பயனற்றது ?

பதில் : எதில் வேதத்தில் கூறப்பட்டபடி தக்ஷிணை கொடுக்கப்படவில்லையோ, அந்த யாகம் பயனற்றது.

கேள்வி : திக் என்ருல் எது ? (அதாவது உபதேசம் செய்யக் கூடியவர்கள் எவர் ?)

பதில் : வேதங்களை நன்கு அறிந்தவர்கள்.

கேள்வி : ஜீவனுடைய ஸ்வரூபம் எது ?

பதில்: பிருஹ்மஸ்வரூபமே ஜீவனுடைய ஸ்வரூபம்.

கேள்வி : எது அந்நம் ?

(அதாவது அந்நத்தை உண்டு கரைத்துவிடுவதுபோல் கரைக்கப்பட வேண்டியது எது ?)

பதில்: இந்திரியங்களும், அவற்றால் அறியப்படும் இப்பிரபஞ்சமும். (இவையெல்லாம் மித்யை என்று உணர்ந்து இவற்றைத் தள்ளிவிடவேண்டுமென்பது கருத்து).

கேள்வி : எது விஷம் ?

பதில் : காமமே விஷம். (ஜனனம், மரணம் முதலிய ஸம்ஸாரத்தை அளிக்கின்றபடியால் காமமே விஷம். காமத்தை ஒழித்து, குருபதேசத்தால் பிரபஞ்சத்தை மித்யை என்று உணர்ந்து அதைத் தள்ளிவிட்டு, ஜீவபிருஹ்ம ஐக்யத்தை அறிய வேண்டும் என்பது கருத்து.)

கேள்வி : சிராத்தத்திற்கு காலம் எது ?

பதில் : சிறந்த பிராம்மணன் கிடைக்குங்காலமே சிராத்தத்திற்கு காலம்.

(அதாவது ஸத்பாத்ரம் கிடைக்கும் பொழுதே தானம் முதலியவற்றை செய்யவேண்டும். நல்ல ஆசார்யன் கிடைக்கும்பொழுது தத்துவத்தை அவரிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டும்.)

கேள்வி : தவத்தின் இலக்ஷணம் என்ன ?

பதில் : அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட தர்மத்தை விடாமல் அனுஷ்டித்தலே தவமாம்.

கேள்வி : தமம் என்றால் என்ன ?

பதில் : மனத்தைப் போனபடியெல்லாம் விடாமல் அடக்குவதே தமம்.

கேள்வி : க்ஷமா என்றால் என்ன ?

பதில் : த்வந்த்வம் எனக் கூறப்படும் பசி—தாகம், ராகம்—த்வேஷம் முதலியவற்றைப் பொறுத்துக் கொள்வதே க்ஷமா எனப்படும்.

கேள்வி : ஹ்ரீ: என்றால் என்ன ?

பதில் : கெட்ட காரியங்களைச் செய்ய வெட்கப்பட்டு, அவற்றில் ஈடுபடாமல் இருத்தலே ஹ்ரீ: எனப்படும்.

கேள்வி : ஞானம் என்றால் என்ன ?

பதில் : உண்மையான பொருளை அறிந்துகொள்ளுதலே ஞானமாம்.

சாதகன் பயில வேண்டியவை



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

பணம் படைத்திருக்கிறவர்கள் தங்களுடைய செல்வத்தைச் சொந்த நலனுக்கென்றே வைத்துக் கொள்வது தகாது. கஷ்டப்படுகிற ஜனங்களுக்கு ஏதாவது ஒருவிதத்தில் உதவி புரிய வேண்டும்.

ஒருவன் உறுதியான உள்ளம் படைத்தவனுக இருக்க வேண்டும். தொடுத்த கர்மத்தை விடாது செய்யும் ஊக்கம் அவனிடத்து இருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஆத்ம சாதனம் சாத்தியமாகிறது.

கடைக்காரன் ஒருவன் அன்றுட வரவு செலவுக் கணக்கைச் சரிபார்ப்பதற்கு முன்பு படுக்கப் போவதில்லை. அவ்வாறே, நல்ல ஆத்ம சாதகன் ஒருவன் தன்னுடைய நித்திய கர்மங்களை முறையாகச் செய்து முடிக்காது ஒரு நாளையும் வீண்போக்கான்.

இவ்வுலகம் கர்மபூமி. அவரவர் கிருத்தியங்களைச் செய்து முடிக்க நாம் இங்கே வந்திருக்கிறோம். வந்த காரியம் முடிந்ததும் நாம் இதைவிட்டு மரணத்தின் வாயிலாக வெளியே கிளம்பியாக வேண்டும்.

அனைத்தும் ஈசனுடையசிருஷ்டி எனினும், நம் வினைக்கு நாம் பொறுப்பாளிகளாகிறோம். தீவினையின் விளைவு கேடாய் வந்து அமையும். மிளகாயைத் தின்றால் நாவானது கடும் காரத்துக்கு உட்படத்தானே செய்யும்?

ஞானம், பக்தி, விவேகம், வைராக்கியம் போன்ற தெய்வ சம்பத்துக்களையே பகவான் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்.

இல்வாழ்வு வாழ்பவர்களுள் சிலர், சாதனங்கள் புரிகின்ற பொழுது ஆனந்த பரவசமடைவதுண்டு. பட்டு மடியணிந்து கொண்டு ஆர்வத்துடன்அவர்கள் பூஜை, ஆராதனை, தியானம் முதலியன செய்கின்றனர். அமுது பண்ணும்பொழுதும் அந்த மன நிலை கலையாது அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் உலக வியவ

காரங்களில் நுழைந்ததும் அவர்களுடைய மனம் மிகக் கீழ்மையில் உழன்று கொண்டிருப்பதைக் காணலாம். ராஜோகுணமும் தமோகுணமும் அப்பொழுது தலையெடுக்கின்றன.

கடவுளால் தூண்டப் பெற்றே நான் அனைத்தையும் செய்கிறேன் என்றால், நான் புரிகிற பாபத்துக்கு நான் பொறுப்பாளியல்ல.

அப்படியா? துரியோதனன் கூட இவ்விதம் பகர்ந்தான்: ''கிருஷ்ணா, நீ என் ஹிருதயத்தில் குடியிருந்துகொண்டு எதைச் செய்யும்படி தூண்டுகின்றாயோ, அதைச் செய்கிறேன்,'' என்றான் அவன்.

கடவுள்தான் கர்மங்கள் அனைத்துக்கும் கர்த்தா என்பதையும், தான் அவர் கையிலுள்ள வெறும்கருவியென்பதையும் முற்றிலும் உணருகிறவன், ஒருபொழுதும் பாபம் செய்வதில்லை. இனி, சித்தசுத்தி அடைவதற்கு முன்பு ஈசன் இருக்கிறார் என்னும் நம்பிக்கையே வருவது கிடையாது.

வயிற்றுப் பிழைப்புக்காக வேண்டி ஒரு மதத்தைப் புறக்கணித்துவிட்டு மற்றொரு மதத்தைத் தழுவுகிறவர்களும் உண்டு. அவர்களுடைய விஷயம் பரிதாபகரமானது.

நிஷ்காமிய கர்மம் பண்ணுவது மிகநன்று. தொல்லை எதையும் அது உண்டுபண்ணுவதில்லை. ஆனால் மனிதனுக்கு எங்கிருந்தோ சுயநலம் வந்து விடுகிறது. அதைத் தொடர்ந்து கவலையும் வந்து விடுகிறது.

ஈசுவரானுபூதி வருவதற்கு முன்பு, மனிதனிடத்து அகங்காரமிருக்கிறது. அந்த அகங்காரத்தோடு கூடியிருக்கிற பொழுது, தனக்குப் பாப புண்ணியம் இல்லையென்று அவன் வாயால் சொல்லலாம் ஆனால் எப்படியோ அவன் பாபச் செயலைச் செய்து விட்டால், அதைக் குறித்து அவன் உள்ளத்தில் போராட்டம் நிகழ்கிறது.

காமக்குரோதங்கள் போன்ற இயல்புகள் இல்லாது மானுட சரீரம் நீடித்து இருப்பதில்லை. ஆனால் அந்த இயல்புகளை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கின்றாயோ, அவ்வளவுக்கவ்வளவு உனக்கு நலம் வாய்க்கிறது.

ஆத்மசாதனத்தில் ஈடுபடுபவர்களைப் பார்த்து, உலகத்தவர்கள் ஏளனம் பண்ணுவதுண்டு. அத்தகையவர்களை சாதகன் ஒருவன் பொருட்படுத்தலாகாது. நாய் முதலியனகுரைப்பதைப்பொருட்படுத்தாது மதம் பிடித்த யானை போவது போன்று, ஆத்ம சாதகன் உலகத்தவர் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாது போக வேண்டும்.

இரண்டு சந்தர்ப்பங்களில் இறைவன் நகைக்கின்றார். மருத்துவன் ஒருவன் நோய்வாய்ப்பட்டிருக்கும் சிறுவன் ஒருவனுடைய தாயைப் பார்த்து, ''அம்மா, நீ வருந்த வேண்டாம். உன் மகன் உயிரை நான் காப்பாற்றுகிறேன்,'' என்கிறான். அவ்வேளையில் இறைவன் ''இச்சிறுவனுடைய ஆயுள் முடிந்து விட்டது. ஆனால் மருத்துவனோ மரணத்தைத் தடுக்கப் போவதாக உறுதி கூறுகிறான்,'' என்று இயம்பி நகைக்கின்றார். இரண்டு சகோதரர்கள் பூமியைப் பாகம் பிரித்துக் கொண்டு ''இது எனக்குரியது, அது உனக்குரியது'' என்று முடிவு கட்டும்பொழுதும் இறைவன் நகைக்கின்றார். அண்டங்கள் யாவும் இறைவ

னுக்கே உரியவைகள். மக்களுக்கு உரியவைகள் ஒன்றுமில்லை.

காமத்தாலும் காசு ஆசையினாலும் வருகிற அகங்காரம் மிகப் பொல்லாதது. அத்தகைய பொல்லாத அகங்காரம் படைத்திருக்கிறவனிடமிருந்து திருடன் ஒருவன் பத்து ரூபாயைத் திருடிக் கொள்ளுகிறான். அவனைக் கைப்பிடியாகப் பிடிக்கிற மனிதன் 'என்ன! என்னிடமிருந்து பணம் திருடவா இவன் துணிந்திருக்கிறான்? என்னை யாரென்று இவன் அறிந்து கொள்ளவில்லை!' என்று வீராப்புக் கூறுகிறான். திருடனிடமிருந்து ரூபாயைப் பிடுங்கிக் கொள்வதுமல்லாது, அவனை நன்றாகப் புடைக்கிறான். பிறகு தன் அதிகாரத்தைச் செலுத்தி அவனைச் சிறைச்சாலைக்கும் அனுப்பி வைக்கிறான்.

மனிதனுக்கு அகங்காரம் இருக்கிறவரையில் பஞ்சேந்திரியங்களுக்கும் வேலையுண்டு. இந்நிலையிலிருக்கும்பொழுது, உலகை வெறும் கனவு என்று சொல்லுவது பொருந்தாது.

சுருட்டை மயிரை நிமிர்த்திவிட்டால் மீண்டும் அது சுருண்டு கொள்கிறது. அகங்காரம் அத்தகையது. அதை நாம் அகற்றுகிறோம். எனினும் அது மீண்டும் தோன்றுகிறது.

பொருள் கொடுப்பவர்களைப் போற்றுவதும், கொடுக்க மறுப்பவர்களைத் தூற்றுவதும் ஒரு சிலரது இயல்பு. ஆதலால் அத்தகையவர்களுடைய போற்றுதலையோ தூற்றுதலையோ பொருட்படுத்த வேண்டியதில்லை.

ஒருவனுடைய கீர்த்தியை நிலைநாட்டுவதையும், அவன் துவக்கிய இயக்கத்துக்கு வலிவு கொடுப்பதையும், மற்றொருவன் தன் கடமையாக எடுத்துக் கொள்ளலாகாது. ஆழ்ந்து ஈசுவர பக்தியில் மூழ்குவதே எல்லாருடைய கடமையும் ஆகிறது.

கர்மம் செய்யாது யாரும் இருக்க முடியாது. ஆதலால் ஈசுவரார்ப்பணமாக சாதகன் ஒருவன் கர்மம் செய்து கொண்டிருக்க வேண்டும். உலகத்தவருடைய ஆமோதிப்பின் பொருட்டோ, அல்லது கீர்த்தியின் பொருட்டோ செய்கிற காரியம், நிஷ்காமிய கர்மமாகாது. அது மனிதனைப் பந்தப்படுத்திவிடும்.

மக்களுள் பெரும்பான்மையோர் புகழுக்காவோ, புண்ணியத்தைத் தேடுதலின் பொருட்டோ பரோபகாரம் செய்கின்றனர். அத்தகைய சேவைகள் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவைகள்.

உலகுக்கு உதவி பண்ணுகிறேன் என்று மனிதன் நினைக்கின்றான். ஆனால் உலகுக்கு உதவி பண்ண மனிதனுக்கு இயலாது. கடவுள் ஒருவரே உலகுக்கு உதவி புரிகிறார்.

மக்கள் உலகத்துக்கு நலம் செய்ய வேண்டும் என்னும் கருத்துடன் என்னென்னவோ செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் தங்கள் உள்ளத்தினுள் தெய்வம் வீற்றிருப்பதை அறிந்து கொள்ளுகிறவர்களுக்கு, மனப்பான்மை மாறிவிடுகிறது. தெய்வத்தோடு உறவாடுதலிலேயே அவர்கள் ஊக்கம் மிகக் கொள்கின்றனர்.

பக்தன் ஒருவன் 'இறைவா, என்னை யாண்டும் உன் சன்னிதியில் வைத்திரு' என்று பிரார்த்திப்பான். 'ஆஸ்பத்திரி கட்டுவதற்கு எனக்கு வசதிகள் செய்து தா' என்றோ, அல்லது அது போன்ற திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றோ அவன் பிரார்த்திக்க மாட்டான்.

அன்னதானம் போன்ற கைங்கரியங்களை அளவுக்கு மிஞ்சிச் செய்கிறவர்கள், பேரும் புகழும் பற்றிய ஆசைக்கு அடிமைகள் ஆகிவிடுகின்றனர்.

வீட்டுக் கூரையில் சிங்கத்தின் தலைகளோடு கூடிய குழாய்கள் வைக்கப்பட்டிருக்கிறன. அவைகளின் வாயினின்று நீர் வருவது போன்று தென்படுகிறது. உண்மையில் அந்த நீர் வானத்தினின்று மழையாகப் பொழிந்ததாம். மனிதன் தான் மேலோன் ஆகியிருப்பதாக எண்ணிக்கொள்கிறான். ஆனால் பதவிகள் அனைத்தும் பகவானிடத்திலிருந்து வருபவைகளாம்.

நாம் இன்னும் சிறுவர்களாகவே வாழ்ந்து வருகிறோம்

வேலவன்



ஒரு பொருளின் உண்மை இயல்பே அதனுடைய சொரூபம் அல்லது சொந்த வடிவம். உண்மை இயல்பினைத் தவிர, வேறு பல இயல்புகள் அல்லது தன்மைகள் அந்தப் பொருளிடத்தே காணப்படலாம். அவையெல்லாம் **போலி** இயல்புகள்.

இந்தப்போலி இயல்புகளுக்கும் உண்மை இயல்புகளுக்கும் இடையேயுள்ள ஒரு முக்கியமான வேறுபாடு என்ன வென்றால், ஒரு பொருளையே அழித்தாலொழிய அதன் உண்மை இயல்பை அழிக்க முடியாது; அதாவது, உண்மையியல்பு அதற்குரிய பொருளை விட்டு ஒரு நாளும் விலகமாட்டாது. ஆனால் போலி இயல்புகள் அப்பொருளிடத்தே என்றும் நிலைத்திருப்பதில்லை; அவை ஒரு காலத்தில் காணப்படும், பிறிதொரு காலத்தில் காணப்படமாட்டா. எனவே போலி இயல்புகள் அநித்தியமானவை, உண்மை இயல்பு நித்தியமானது. உண்மை இயல்பைச் சொரூப இலக்கணமென்றும், போலி இயல்பைத் தடத்த இலக்கணமென்றும், பரிபாஷையாக வழங்குவர்.

ஒரு மாணவனின் தந்தை, தன் மகன் படிக்கும் பள்ளிக்

கூடத்து ஆசிரியர் ஒருவரைப் பார்க்க விரும்பினார். அப்போது விடுமுறைக் காலமாகையால் ஆசிரியரை அவருடைய வீட்டில் சென்றுதான் பார்க்க வேண்டிய திருந்தது. அந்த வீடு எங்கே யிருக்கிறதென்பது பையனின் தந்தைக்குத் தெரியாது; ஆனால் பையனுக்குத் தெரியும். எனவே அவர் தன் மகனைக் கூப்பிட்டு, ''உன் ஆசிரியர் வீட்டின் அடை யாளம் என்ன?'' என்று கேட் டார்.

அது இன்ன தெருவிலுள்ள இன்ன இலக்கமிட்ட வீடு என்று அவன் கூறியிருக்க வேண்டும். அப்படிக் கூறாமல், ''அந்த வீட்டைக் கண்டுபிடிக்க உங் களுக்கு வேறு எந்த அடை யாளமும் வேண்டியதில்லை, அப்பா. நீங்கள் தெரு வழி யாகப் போகும்போதே, உங்கள் வலது பக்கமாகத் திரும்பிப் பாருங்கள். அங்கே ஒரு கூரை மேலே இரண்டு காக்கைகள் உட்கார்ந்திருக்கும். அதுதான் எங்கள் ஆசிரியரின் வீடு!'' என் றானாம் அந்தப் பையன். அவன் கூறிய இந்த அடையாளமே அந்த வீட்டின் தடத்த இலக் கணம் அல்லது போலி இயல்பு எனப்படுவது !

பையன் எப்போதோ ஒரு முறை அந்த ஆசிரியரின் வீட் டுக்குப் போயிருக்கிறான். அப் போது அங்கு கூரை மேல் இரண்டு காக்கைகள் இருந் திருக்கின்றன. அதற்கப்புறம் பல நாட்கள் கழித்து, அவன் தன் தந்தையிடம் அந்த வீட் டுக்கு அடையாளம் கூறுகிறான். அதுவரையில் அந்தக் காக்கை கள் அங்கேயே கற் சிலை போலவா உட்கார்ந்திருக்கும் ? இந்த எளிய உண்மையை அறிய வில்லை அந்தச் சிறு பையன்!

ஆனால், அந்தச் சிறு பைய னுடைய நிலையில்தான் உலகில் இன்று பெரும்பாலோர் இருந்து வருகிறோம். எப்படி யென் றால்,—

வாழ்க்கையில் நாம் பல திறப்பட்ட மனிதர்களோடு பழகுகிறோம். அவர்களில் ஒரு சிலரை நமது உத்தம நண்பர்க ளாகக் கருதுகிறோம்; அதே போல் வேறு சிலரை நமது ஜென்மப் பகைவர்களாகப் பாவிக்கிறோம்.

ஒரு தந்தைக்கு நான்கு பிள்ளை கள் பிறக்கிறார்கள். அவர்களில் ஒருவனிடத்து மட்டும் அவர் மிகவும் பிரியமாக நடந்துகொள் கிறார். மற்றொருவனை விஷம் போல் வெறுக்கிறார். இதர இரண்டு பிள்ளைகளையும் பிரிய மும் இன்றி வெறுப்பும் இன்றிச், சாதாரணமாக நடத்தி வருகிறார்.

''ஏன் ஐயா, இவர்கள் நால் வருமே உமது பிள்ளைகள்தாமே? அப்படியிருக்க, உமக்கு ஏன் இந்தப் பார பட்சம்?' என்று நாம் அவரைக் கேட்போ மானால்,—

''எனக்கு எல்லாப் பிள்ளை களும் ஒன்றுபோலத்தான், ஐயா. இருந்தாலும். மூத்த பிள்ளை மிகவும் பணிவுள்ளவனாக இருக் கிறான்; அதனால் அவனிடத்தில் நான் பிரியமாயிருக்கிறேன். கடைசிப் பையன் என் பேச்சைக் கேட்கிறானில்லை; அதுவே எனக்கு அவன்மீது எரிச்சலை உண்டு பண்ணுகிறது!'' எனப் பதிலளிக் கிறார் அத் தந்தை.

இதிலிருந்து என்ன தெரி கிறது ?

ஒருவனது பணிவுக்காக அவனை விரும்புகிறார் அவன் தந்தை. மற்றவனது பணிவின்மைக்காக அவன்பால் அவர் வெறுப்படைகிறார்.

இந்தப் பணிவும் பணிவின்மையும் ஒருவனது சொரூப இலக்கணமா, அல்லது தடத்த இலக்கணமா? அதாவது, அவை அவனது உண்மை இயல்பா, அல்லது போலி இயல்பா ?

நிச்சயமாக உண்மை இயல்பல்ல; போலி இயல்புதான்!

ஏனெனில், ''பையன் முன்பெல்லாம் ரொம்பப் பணிவோடு தான் நடந்து வந்தான். ஆனால் இப்போது கல்யாணம் ஆனவுடன் தன் பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கொண்டு, என்னையே எதிர்த்துப் பேசத் துணிந்துவிட்டான், சார்!'' என்று தம் நண்பர்களிடம் முறையிடும் தந்தைமார் எத்தனையோ பேரை நாம் நித்தமும் பார்த்து வருகிறோம்.

அதேபோல, ''இந்தப் பையன் சின்ன வயதில் எவ்வளவு துஷ்டனாயிருந்தான்! இப்போது பாருங்கள், எப்பேர்ப்பட்ட சற்புத்திரனாக மாறிவிட்டான்!'' என்று வியந்து பேசப்படும் வார்த்தைகளையும் நாம் கேட்டிருக்கிறோம்.

அதாவது, ஒருவனது நற்பண்பு, தீய பண்பு இவ்விரண்டுமே நிலையானவையல்லவென்று தெரிகிறது.

நிலையில்லாதவையெல்லாம் போலி இயல்புகளே யல்லவா ?

ஆனால் இந்தப் போலி இயல்புகளைக் கொண்டுதான் ஒருவரை நாம் மதிக்கிறோம், அல்லது அவமதிக்கிறோம்!

ஒரு மங்கையின் போலி இயல்புகளுக்காகத்தான் இளைஞன் ஒருவன் அவளைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்கிறான்.

அதே போன்ற வேறு சில போலி இயல்புகளின் காரணமாகவே, சிறிது நாட்களுக்குப் பின்னால் அவளை அவன் வெறுத்து ஒதுக்கிவிட்டு வேறொருத்தியை நாடுகிறான்.

ஒருவர்பால் மற்றவர் காணும் சில போலி இயல்புகள்தாம் இரண்டு நபர்களை நண்பர்களாக்குகின்றன; மற்றும் சில போலி இயல்புகள்தாம் பின்னர் அவர்களைப் பிரித்தும் விடுகின்றன.

ஒரு பொருளின் போலி இயல்பைக் கண்டே அதன்மீது நாம் பிரியப்படுகிறோம்; அதன் வேறொரு போலி இயல்பைக் கண்டுவிட்டு நாம் அதை வேண்டாமென்று தள்ளுகிறோம்.

இப்போது சொல்லுங்கள், தன் ஆசிரியர் வீட்டுக்கு அடையாளம் கூறிய அந்தச் சிறுவனுக்கும் நமக்கும் அடிப்படையில் ஏதேனும் வேறுபாடு இருக்கிறதா என்று!

கண்மூடித் திறப்பதற்குள் பறந்தோடிவிடக் கூடிய இரண்டு காக்கைகளைப் பொருட்டாக மதித்து, ஒரு கட்டடத்துக்கு அவன் அடையாளம் கூறினான். அதேபோல, நிலையில்லாத சில நல்ல குணங்கள் அல்லது தீய குணங்களைப் பொருட்டாக மதித்து, ஒரு மனிதனோடு நாம் உறவு கொள்கிறோம்; அல்லது விலகி விடுகிறோம்.

இந்த இடத்தில் சில முக்கியமான சந்தேகங்கள் எழுவது இயல்பேயாகும். அதாவது,—